ஓம்

பராசக்தி துணை

Santhaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

460

## அம்மன் உற்பத்தி

# பூசாரிப்பாட்டு



ரகுநாதன் பதிப்பகம்
(புத்தகப் பண்ணை)

303, காலி வீதி, கொழும்பு-3.

உ

பராசக்தி துணை

# சகல தேவதைகள் வர்ணிப்பு

என்னும்

அம்மன் உற்பத்தி

# பூசாரிப் பாட்டு

DONATED TO
JAFFNA UNIVERSITY LIBRARY
BY
Prof. Karthigesu Sivathamby
in Memory of his Father
PANDIT SAIVAPULAVAR
T. P. KARTHIGESU
2000

ம-ா-ா-ஸ்ரீ K. M. நாராயணசாமி முதலியார்
மாணவர் M. தேவராஜமுதலியாரவர்களாலும்,
பூசாரி. அ. க. ஷண்முக நாயகர் மாணவர்
ம. சக்திவேல் செட்டியாராலும்,
இயற்றப்பட்டது.

கிடைக்குமிடம்

ரகுநாதன் பதிப்பகம்

புத்தகப் பண்ணை

303 காலி வீதி கொள்ளுப்பிட்டி

கொழும்பு—3.

தொலைபேசி: 26946 விலை ரூபா..........

பூசாரிகள் கவனிக்க வேண்டிய

# முக்கிய கவனிப்பு

இந்நூலை வாசிக்கும் பூசாரிகளுக்கு தெரியப் படுத்துவது என்னவென்றால் புதியதாக சில தேவதை களின் பேரில் பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேலும் அம்மன் ரேணுகை உற்பத்தியும், அங்காளம்மன் உற்பத்தியும், மதுரை வீரசுவாமி உற்பத்தியும், காத்தவராய சுவாமி உற்பத்தியும், சுருக்கமாகவும், ஒரே பாட்டில் உற்பத்தி சொல்லக் கூடிய கருத்துகளை சேர்க்கப்பட்டு இருக்கின்றன. முதல் அசசிட்ட புத்தகத்தைவிட பல தேவதை களின் பேரில் அலங்கார பாடல்களும் சேர்க்கப் பட்டது இப் புத்தகத்தை ஒரு முறை நீங்கள் பார்வை யிட்டால் தெரியவரும்.

இப்படிக்கு,
ஆர். ஜி. பதி

---

முக்கிய கவனிப்பு :—

கீழ்க்கண்ட எமக்கு உரிமையுள்ள நூலையும் வெளியிட்டிருக்கிறோம்.

மதுரை வீரசாமி உற்பத்தி

## பூசாரிப் பாட்டு

விலை ரூபா. 1-00.

எமது விலாசம் :—

ஆர். ஜி. பதி கம்பெனி,
4, வெங்கட்ராமய்யர் தெரு,
சென்னை-1.

உ

பராசக்தி துணை

# பூசாரிப் பாட்டு

## முக்கியமாய் செய்ய வேண்டிய முறைகள்

1 முதல் பதிவிளக்கையாவது அல்லது அம்மன் உருவாவது சிங்காரித்து வைத்துவிட வேணடும்.

2 பூசாரிகள் உடுக்கையை கையில் வைத்து ஏந்து முன் குருவை தொழுது விட்டு பிறகு கீழ் குறித்துள்ள விருத்தத்தை ஆரமபிக்க வேண்டும்.

3 பம்பை தட்டுவோரும், சிலம்புக்காரர்களும், ஷை பூசாரிகளுக்குக் குறித்துள்ள பிரகாரம, நீஙக ளும் அவருடன் வணங்க வேண்டும்.

4 விளக்கு முகமாய் பூசாரிகள் திருமபிக் கொண்டு கீழ் குறித்துள்ள விருத்தத்தின் ஒரு அடியை பாடிவிட்டதும் அதன் அடியில கொடுத்துள்ள (ஆ) என்னும் சப்தத்தை பம்பைக் காரர்களும், சிலம்புக்காரர்களும், சொல்ல வேண்டியது அவசியம்.

## முக்கிய கவனிப்பு

1 பூசாரிகள் கவனிக்க வேண்டியதென்ன வென்றால், கீழ் குறித்துள்ள விருத்தத்தில் ஒரு அடி பாடிவிடும் தறுவாயில், உடுக்கையை மெதுவாய் ஒருதட்டு தட்டவேண்டும. சிலம்பை அசைகக வேண்டும்.

2 ஒவ்வொரு அடிக்குக் கீழ் குறித்துள்ள பிரகாரம் பூசாரிகளும், பம்பைக்காரர்களும், சிலம்புக்கா ரர்களும் விருத்தம் முடிவாகும் வரையில் நான் தெரிவித்த பிரகாரம் அவசியம் நடக்க வேண்டும்.

## விநாயகர் விருத்தம்

[பூ] ஓம் கணபதி மஹா கணபதி
திரிலோக வசிய சங்கார

மனதிலும் நாவிலும் நினைக்க
சிவாயா வென்னும்
எஙகள் மகா கணபதியே
நீ வந்தமரும் வேளையிங்கே
[ப] அய்யா வந்தமரும் வேளையாமே
எங்கள் மகா கணபதியே.

## முக்கிய கவனிப்பு

பூசாரிகள் பாடும்போது பம்பை, உடுக்கை, சிலம்பையையும் மெதுவாய் தட்டவேணும், பின்னுல் பம்பைக்காரர்கள் எடுத்துப் பாடும்போது, மேற்படி குறித்துள்ள ஆயுதங்களை முடுக்குடன் ஜோராய் வாசிக்க வேணடும்.

## கணேசர் மீதில் பாட்டு

[பூ] சாலையிலே என் அய்யா கண் வளர்ந்த
சப்பாணி என் அய்யா பிள்ளையாரே
கயமுகனை என் அய்யா கருவறுத்த
கணபதியே என் அய்யா வாருமையா
பானைவயிர் என் அய்யா தான்குலுங்க
பாரத்தும்பி என் அய்யா முன்னசைய
வீரமுடன் என் அய்யா கொம்பொடித்து
வியாசருக்கு என் அய்யா பாரதமும்
எழுதிதந்த என் அய்யா விக்கினரே
எழுந்தருளும் என் அய்யா தீபமதில்
காமாக்ஷி என் அய்யா கைவிளக்கில்
கணபதியே என் அய்யா முன்னமரும்
[பாட்டு முடிவு]

## விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை :—
சாளிகவாகனத்தில் என் ஐயா கணபதியே
சல்தி பழனமிட்டு

---

[பூ] என்பது பூசாரிகள்.
[ப] என்பது பம்பைக்காரர்கள்.

வந்தேன் மகனே என்றால் என் ஐயா கணபதியே
வாரிசரம் பொழியே
இன்னும் ஆரார்வரும் வேளை என் ஐயா கணபதியே
ஆயியுட தீபமதில்
[ப] (இன்னும் ஆரார் வரும் வேளை) முடிவு.

கடவுள் பேரில் விருத்தம்

[பூ] ஓம், அரகரா ஒளிங்கா நமசிவாயம்
பக்திபார்வதா பரமகுருவே நமசிவாயம்
சிற்றம்பலநாதா சிவன்குருவே நமசிவாயம்
பொன்னம்பலநாதாபொற்குருவேநமசிவாயம்
ஆண்முடி பெண்முடி அறுபத்தோராயிரம்
கொடிமுடி கையில் கண்வளர்த்த ஆதி
மன்னுதலிங்கா
ஆலகாலவிஷத்தையும் அள்ளியே அமுதுண்ட
ஈசனே அரகரா மயேசனே பரமகுரு
வாசனே அடிஅண்ணுமலை யீசனே வா
[ப] ஹர ஹர, ஓம் ஓம்.

சரஸ்வதி பேரில் பாட்டு நையாண்டி

[பூ] வாணிகலைவாணியம்மா வாழ்மறையோன் தேவியம்மா
சத்தகலைவாணியம்மா சதுர்முகனார் பாரியம்மா
அரனருட நாவிலம்மா அரசெல்விக்காயானாள்
ஈசசங்குருத்திலம்மா எழுதினளாம் பஞ்சாங்கம்
தாழங்குருத்திலம்மா தனித்தாளாம் சுருளோலை
எழுரு காளியர்க்கு எழுதுவாராள் தூதோலை
பத்தூருக்காளியர்க்கு பகர்ந்துவாராள் தூதோலை
ஆளனுககு அன்னாதம் அருவஙிளிக்கு அக்கினிதேர்

விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை:—
எழுதுமுன் எழுத்தானாய் என் தாயார் கலைமகளே
எழுந்தாயா தீபமதில்
தாமரை மலரைவிட்டு என் தாயார் கலைமகளே
தாண்டவ மாடுமம்மா

வந்தேன் மகனே என்று   என் தாயார் கலைமகளே
வரம்தந்து ஆளுமம்மா
இன்னும்யாரார்வரும்வேளை என் தாயார் கலைமகளே
இந்த காமாக்ஷி தீபமதில்
[ப] (இன்னும் யாரார் வரும் வேளை)

## முருகர் அழைப்பு பாட்டு

| | |
|---|---|
| ஆறெழுத்து முருகைய்யா | ஆறுமுகம் |
| அறுகோணம் முருகைய்யா | ஓருடல் தான் |
| சரவணையில் முருகையயா | பிறந்ததினால் |
| சரவணராய் முருகைய்யா | முன்னமர்ந்தீர் |
| கற்பூர முருகைய்யா | காவடியை |
| கதிர்காமம் முருகைய்யா | ஏந்திவர |
| இடும்பர்நல்ல முருகைய்யா | கடம்பருமாய் |
| இருபுறமாய் முருகைய்யா | சூழ்ந்துவர |
| மான்பிறப்போ முருகைய்யா | வள்ளியம்மை |
| மயில்பிறப்போ முருகைய்யா | தெய்வயானை |
| வள்ளிநல்ல முருகைய்யா | வலதுபுறம் |
| தெய்வயானை முருகைய்யா | இடதுபுறம் |
| இதுநடுவே முருகைய்யா | கானமயில் |
| இருந்தநல்ல முருகைய்யா | ஆடிவர |

## விளக்கின் அழைப்பு

[பு] வசன நடை :—

கோடி ஜனம் கையெடுக்க   என் ஐயா வேல்குமரா
குடவிளக்கில் வந்ததுண்டா
காவிக் கொடியாடாதா   என் ஐயா சண்முகமே
கன்னுனுட தீபமதில்
அமரய்யா புண்ணியனே   என் ஐயா வடிவேலா
அழைக்கின்றேன் தேவரெல்லாம்
ஆரார் வரும் வேளை   என் ஐயா கதிர்வேல்
ஆயியுட தீபமதில்
[ப] ஆரார் வரும் வேளை

## மதுரை வீரசுவாமி பேரில் விருத்தம்

[பூ] வள்ளியொரு பொம்மிபாய் வந்திருந்தாளங்கு
வகையுடன் பொம்மணர்க்கு
வாஞ்சையாய் தெய்வயானை வெள்ளையம்மையாக
வாட்டமாய் தானுதித்தாள்
விரைவுடன் கானமயில் தொட்டியன் காரிக்கு
விருப்பமாய் பிறந்திருக்க
வீரிட்டிறைஞ்சிடும் அலங்காரநாகனும்
வீரருடன் நாயுமாக
வெண்மையாய் துலங்கிட அவதாரம் செய்துமே
வெட்டருவால் கையிலேந்தி
வேதாந்தி நாதாந்தி மீனாக்ஷி சொக்கருட
வேளையாய் மதுரை வந்து
வைகை கரை வாராமல் சண்டாளக் கள்ளர்களை
வைராக்கியமாய் அறுத்து
ஒதுங்கியே ஜோனகரை வெட்டியே ரதத்தின் முன்
ஒருவரையும் அண்டாமலே
வோட்டியே தாயார் மீனாள் மகிழ்ந்திட
வோசையுடன் கொக்கரித்து
லௌகிகமாக சகல வரம்வாங்கியே
இவ்வுலகு தெய்வமாகி
அன்பர்முடி மீதினில் அனுதினமும் விளையாட
அணிமதுரை வீர துரையே.
[ப] அன்பர்முடி மீதினில்

## விருத்தம்

[பூ] கள்ளர் குலவைதியாய் கன்னிவனம் தழைத்திட
கம்மத்தடி கார்க்கும் வீரர்
கம்பளத்தார்களை கருவேரறுத்திட
கதறியே நின்ற வீரர்
கண்ணனுடன் தங்கவொளி நவரத்தின முடிபூண்டு
கண்ணாடிவுருவான வீரர்
கணகண ஜெகஜெக நடனமிடும் வாசியில்
கருணைவொளி வான வீரர்

கன்னியாம் வெள்ளையொடு பொம்மியிரு மங்கையர்கள்
கழலிணை துதிக்கும் வீரர்
கல்நெஞ்ச வஞ்சக பஞ்சமா பாதகரை
கனவிட்டெறிக்கும் வீரர்
கருத்தினில் நினைத்திடும் உத்தமர் மனை வாழ
கண்திறந்தருளும் வீரர்
ககனமாதர்களும் மலர்மாரி பொய்யவே
கவனம் வைத்தென் முன் வரவே
[ப] அரகரா, ஓம் ஓம்.

இரட்டைசீர் ஆனந்தமே—என்ற மெட்டு

[பூ] ஆலவாய் சொக்கலிங்கம் மதுரை பாண்டியா
அம்பிகையாள் மீனும்பாள் முத்து பாண்டியா
சோலைவாழ் சொக்கலிங்கம் மதுரை பாண்டியா
சுந்தரியாள் மீனும்பாள் முத்து பாண்டியா
மீனும்பாள் கோவிலண்டை மதுரை பாண்டியா
மின்மேடை கார்த்தவரே முத்து பாண்டியா
காமாக்ஷி கோவிலண்டை மதுரை பாண்டியா
கம்பத்தடி கார்த்தவரே முத்து பாண்டியா
பலிபீடம் விட்டல்லவா மதுரை பாண்டியா
பாண்டியரே வாருமையா முத்து பாண்டியா
[ப] பலிபீடம் விட்டல்லவா

மாயிமருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] அஸ்வமுதுகூர்ந்து ஆனந்தமே
ஆணிமுத்து வாருமையா ஆனந்தமே
காரிமுதுகூர்ந்து ஆனந்தமே
கடவுள் துணை வாருமையா ஆனந்தமே
மங்கை பொம்மி தன்னுடனே ஆனந்தமே
மதுரை பழனமிடும் ஆனந்தமே
வெட்டருவாள் தோளிலிட்டு ஆனந்தமே
வெளிப்படய்யா வீரமுத்து ஆனந்தமே

## விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை:
அண்டை பொம்மி வெள்ளையுடன் என் சுவாமி
அரும்விளக்கில் கொஞ்சுமய்யா
கொண்டைமுத்து தான்குலுங்க என் சுவாமி
கொஞ்சுமய்யா தீபமதில்
ஆரார் வரும்வேளை என் வீரமுத்து சுவாமி
ஆயியுட தீபமதில்
[பூ] ஆரார் வரும் வேளை

## ஏழுமலையான் பேரில் பாட்டு

[பூ] நையாண்டி
கோணமலையானே ராமராமா
கோவிந்தா வாருமையா பட்டாபிராமா
நாமம் மணக்குமலை ராமராமா
நானூற்று ராண்டமலை பட்டாபிராமா
துளசி மணக்குமலை ராமராமா
துவாரகையார் ஆண்டமலை பட்டாபிராமா
தள்ளாக் கிழவரெல்லாம் உன் மலைமேலே
தடி ஊணி ஏறும்மலை பொன் மலைமேலே
மொண்டி முடங்களெல்லாம் உன் மலைமேலே
மண்டியிட்டு ஏறுமலை பொன் மலைமேலே
நட்டாற்றுக் கம்பமானர் ஒரங்கனுதா
நரசிங்க ரூபமானர் ஸ்ரீரங்கனுதா
உலகத்தை ஓரடியாய் அளந்த பெருமாளே
ஒன்ருக ரூபம் தரித்த பெருமாளே
நன்ருக நாமம் தரித்த பெருமாளே
நாகத்தின் மேல்பள்ளி கொண்ட பெருமாளே

## விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை:—
அலமேலு மங்கையுடன் என் ஐயர கோவிந்தா
அரிராமா வந்தமரும்
சீதை குறத்தியுடன் ஏழுமலையானே
ஸ்ரீராமா வந்தமரும்

காமாக்ஷி தீபமதில் என் ஐயா மலையானே
கண்ணபிரான் முன்னமரும்
ஆரார் வரும் வேளை என் ஐயா மலையானே
ஆயியுட காவலிலே
[ப] ஆரார் வரும் வேளை.

கிராமதேவியின் விருத்தம்

[பு] பலதெய்வ ரூபமாய் பரவொளி சத்தியாய்
பக்ஷமாய் எத்திசையிலும்
பாரினில் பாம்பாங்கு ஏரிலும் வயலிலும்
பார்வதி கோவில் கொண்டு
பிரியமாய் அங்கங்கு கிராமத்தில் தேவியென
பின் புறம் பூதம் சூழ
புதுமைமிக காட்டியே வேணபூசை கொள்ளும்
புனிதவதி பார்வதியும்நீ
பூமிக சொறிந்திட காப்புமிக கட்டியே
பூமியில் பொங்கலிட்டு
பெருமையாய் பத்துநாள் உற்சவம் கொண்டாடி
பெரு மனதுடன் தொழுகுவார்
பேரிகையுடன் தாரை பறை கொட்டிவுமை பலி[
பேறுலகில் வாங்கிடும்
பைரவ மணிதாயே நீயே கதியென
பைரவி கௌரி கார்ப்பாய்
பொங்கலும் மாவிளக்கு மாவுடன் கூழுகள்
பொருந்திட தான் படைப்பார்
போக்கிரி அண்ணமார் கூட்டம் படைசேனையு
போர்வீரர் சூழ வருவாய் [டன்
பௌதீகமாய் வுலகில் அதிசெய்யும் மக்களை
பிரியமாய் ஆளும் தாயே தாயே
[ப] பிரியமாய் ஆளும்.

---

பிரியமாய் என்ற இடத்தில் அந்தந்தவூர் கிராமதேவி பேரை வைத்து பாடவும்.

## கிராமதேவியின் பேரில் சமயநடை

[பூ] ஊர்காக்கும் என் னம்மா காளியம்மா
உத்தமியே என் தாயே திருமவல்லி
நாடுகார்க்கும் என் னம்மா காளியம்மா
நாதாந்தி என் தாயே திருமவல்லி
அடியளந்து என் னம்மா எல்லைகட்டி
அண்ணமெல்லாம் என் தாயே காவலிட்டால்
மண்ணளந்து என் னம்மா எல்லைகட்டி
மன்னரெல்லாம் என் தாயே காவலிட்டால்
உன் உத்திரவு என் னம்மா இல்லாத
உள் நுழையார் தாயே தேவரில்லை
மன்னுப்பு என் தாயே இல்லாத
மனை நுழையார் இங்கே தேவரில்லை
கட்டவந்த என் தாயே ஏமனுக்கு
கயிற்பாசத்தை என் னம்மா கைகொடுப்பாள்
பீடிக்கவந்த தாயே ஏமனுக்கு
பின்பாசத்தை அம்மா கை கொடுப்பாள்
பாம்பேரா என் தாயே மண்டபமாம்
பத்துநிலை என் னம்மா கோபுரமாம்
எறும் பேரா என் தாயே மண்டமாம்
ஏழுநிலை என் னம்மா கோபுரமாம
எட்டு நாலு என் தாயே கொட்டியம்மா
எடுத்து பறை என் னம்மா சாற்றிவர
[ப] ஆமாம ஆமாம்.

## மாயிமருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] பத்து நாள் கொட்டியம்மா ஆனந்தமே
பரகாப்பு நாட்டமிட்டார் ஆனந்தமே
ஊர்கூடி பொங்கலிட ஆனந்தமே
வுத்தமியாள் தேரேற ஆனந்தமே
நாடுகூடி பொங்கலிட ஆனந்தமே
நாதரந்தி தேரேற ஆனந்தமே
ஆடுவெட்டி தாரைவூத ஆனந்தமே
அறுத்ததலை கொககரிக்க ஆனந்தமே

கோழிவெட்டி தாரைவூத ஆனந்தமே
குமறமக்கள் கொக்கரிக்க ஆனந்தமே
வூமை பலிவோட ஆனந்தமே
வுதிரபலி முன்னடக்க ஆனந்தமே
ரத்தபலி முன்னோட ஆனந்தமே
ரணவீரர் பின்தொடர ஆனந்தமே
போட்ட சட்டம் வாங்காத ஆனந்தமே
போக்கிரிமார் உங்களண்ணர் ஆனந்தமே
இட்டசட்டம் வாங்காத ஆனந்தமே
இடிமன்னர் உங்களண்ணர் ஆனந்தமே
தங்க தடிக்காரர் ஆனந்தமே
தனிமுனிவுங்களண்ணர் ஆனந்தமே
வெள்ளி தடிக்காரர் ஆனந்தமே
வேனலட்க்ஷம் இங்கிலியர் ஆனந்தமே
[ப] தாயே, தாயே.

கண்சிவந்து கோபித்தாளாம் அம்மன்—என்ற மெட்டு

[பூ] ஆனை படை சேனையுடன் அம்மன்
ஆத்தாளும் பழணமானள் இங்கே
கூட்டம்படை சேனையுடன் அம்மன்
குருபரியாள் பழணமானள் இங்கே
தண்டு நல்ல தளத்துடனே அம்மன்
தவமழகி பழணமானள் இங்கே
சூலத்தை கைபிடித்தாள் அம்மன்
சூட்க்ஷதாரி பழணமானள் இங்கே
நாகன் வடிவெடுத்தாள் அம்மன்
நாதாந்தி பழணமானள் இங்கே
பாம்பாக வுருவெடுத்தாள் அம்மன்
பார்வதியாள் பழணமானள் இஙகே
கடுகசிங்கம் முதுகூர்ந்தாள் அம்மன்
கண்மூன்று வுடையவரும் இங்கே
சிங்கநல்ல வாகனத்தில அம்மன்
சிறப்புடனே பழணமானள் இங்கே
வேப்பிலே கை பிடித்தாள் அம்மன்
வேதாந்தி பழணமாவாள் இங்கே

பச்சிலையை விசிரியல்லோ அம்மன்
பட்க்ஷம் வைத்து பழணமானள் இங்கே
கட்டு பிரம்பெடுத்தாள் அம்மன்
கைநிறைய வேம்பெடுத்தாள் இங்கே
[ப] ஆமாம் ஆமாம்

மாயிமருளியரே என்ற மெட்டு

[பூ] கொத்து பிரம்பெடுத்தாள் ஆனந்தமே
கூசாத வேம்பெடுத்தாள் ஆனந்தமே
பச்சிலைக் காரியம்மாள் ஆனந்தமே
படத்தாலழகி யம்மாள் ஆனந்தமே
பகல் பார்த்தாள் பார்வதியாள் ஆனந்தமே
இரவு பார்த்தாள் ராக்ஷதியாள் ஆனந்தமே
கோழிமுட்டை கண்ணழகும் ஆனந்தமே
கோடாலி பல்லழகும் ஆனந்தமே
செம்பட்டை மயிரழகும் ஆனந்தமே
செவுந்த முகமழகும ஆனந்தமே
பம்பட்டை மயிரழகும் ஆனந்தமே
படர்ந்த முகமழமும ஆனந்தமே
குளிர்ந்த முகமுடனே ஆனந்தமே
குருபரியாள் வாராளே ஆனந்தமே
எல்லாம் அறிந்தவளே ஆனந்தமே
ஏகபராபரியே அம்மா ஆனந்தமே
வுள்ளம் அரிந்தவளே ஆனந்தமே
வுளகளந்தோன் தங்கையம்மா ஆனந்தமே
மாயனுக்கு ஆசை தங்கை ஆனந்தமே
மாதுமையே வாருமம்மா ஆனந்தமே
வரம் கொடுத்து காருமம்மா ஆனந்தமே
வந்தமரும் காவலிலே ஆனந்தமே
[ப] தேவதா தேவதா ஆனந்தமே

கிராமதேவி அழைப்பு பாட்டு

[பூ] அடியளந்து என் தாயே எல்லைக்கட்ள்
அண்ணரெல்லாம் ஏகவல்லி காவலிட்டாடி
தெற்களந்து என் தாயே எல்லைக்கட்டி
தேவரெல்லாம் ஏகவல்லி காவலிட்டான்

ஊர் கூடி என் தாயே பொங்கலிட
உத்தமியாள் ஏகவல்லி முன்னடக்க
நாடு கூடி என் தாயே பொங்கலிட
நாயகியாள் என் தாயே ரதமேர
ஆடுவெட்டி என் தாயே தாரை ஊத
அருத்ததலை ஏகவல்லி கொக்கரிக்க
கோழிவெட்டி என் தாயே தாரைஊத
குமரமக்கள் ஏகவல்லி கொக்கரிக்க
ஊமை நல்ல தாயே பலியோட
உதிரபலி ஏகவல்லி முன்னடக்க
அண்ணரெழுவருடன் தாயே
அதிகாரி என்னபமா வாங்களம்மா
இக்கரைக்கு என் தாயே ஏகவல்லி
அக்கரைக்கு என் தாயே சேணியம்மா
இருவர்நல்ல என் தாயே ஓர்முகமாய்
இருந்தாடி என் தாயே வாங்களம்மா
தணடு நலல தாயே தளத்துடனே
தவமழகி கிராமவல்லி வாங்களம்மா
[ப] தண்டு நல்ல தாயே

விளக்கின் அழைப்பு

[பூ] வசனநடை:—
நீதானு ஏகவல்லி என் தாய் மனேன் மணியே
நீலிநடனம் கொள்ளே
வந்தேன் மகனே யென்று கண்ணுன் விளக்கில்
வாரிசரம் குலுக்கே
தொம்பரப் பெண்ணதுபோல் கிராமவல்லிதாயே
துவண்டாடும் தீபமதில்
எவரார் வரும்வேளை என் தாய் அதிகாரி
ஏகவல்லி தீபமதில்
[ப] எவரார் வரும்வேளை

அம்மன் பேரில் விருத்தம்

[பூ] திருமருகு தாழனூர் ராமனுதபுரம்
தீர்த்தகழி பூவநகரமாம்

செஞ்சமா மலையனூர் திவப்பிரட்டனூர்
சிக்கனம்பாக்கம் மிக்கியதோர்
எருமை வெட்டும் பாளையமாம்
ராயபுரம் இனியினிய
ஸ்தலங்க ளெல்லாம்
இருந்து விளை யாடிவரும்
குருமணி யிழைத்திலங்கு சிங்காதனத்திலமர்ந்த
சிவன் படச்சி லாடச்சி பேச்சி
அதிமதல பாவாட தேசிகன் பவனிவருவாள்
எங்கள் அங்கம்மா ரேணுகையே
இந்த அடிமைகாவல் வந்துநில்லு
[ப] அடிமைகாவல் வந்துநில்லு
எங்கள் பேரான மாரிமுத்தே

துரோபதை யம்மன் விருத்தம்

[பூ] அன்றொரு காலமதில் அரனுடைய பாகத்தில்
அமர்ந்தா யிந்திர சேனையாய்
அதற்குப்பின் நளாயினிதேவியாய் வந்து பின்
அறுணனை தான் மறைத்தாய்
அடங்காத துரியனை வதைத்திட துரௌபதையாய்
அவதாரம் செய்து புவியில்
அந்தகுமிதுவாபரயுகமதில் பாஞ்சாலன்
அனல்யாகமதில் பெண் பிறந்தாய்
அதிர்ந்திட கரமுடன் சப்த ஓங்காரியாய்
அழகுடன் சூலமேந்தி
அருவைவுருவாகியே தர்மருடன் நால்வரை
அஞ்சாமல் மணம் புரிந்து
அண்ணனும் மாயருட வுதவியால் வனம் ஆண்டு
அடங்காத சேனை கொன்று
அதிகசந்தோஷமாய் பழயபடி நாடாண்ட
அம்மை சத்தி துரௌபதை யம்மையே
[ப] அதிக சந்தோஷமாய்

சமய நடை

[பூ] செஞ்சி நல்ல தாயே பதியாளே
செல்வதியே தாயேதுரௌபதையே

பாஞ்சாலன் செய் தவத்தில்
பார்வதி தாயே பெண் பிறந்தாய்
யாகத்திலே தாயே தாயே தானுதித்து
யோகத்திலே தாயே பெறியவளே
பண்டார தாயே பெட்டி தன்னில்
செண்டாடும் தாயே துரௌபதையே
குந்தியம்மன் தாயே மருமகளே
குமரியரே என் தாயே சத்தியம்மா
அண்டாத என் அம்மா நெருப்பேயம்மா
ஆர்க்கடங்கா என் தாயே துரௌபதையே
தீண்டாத என் தாயே பெரும் நெருப்பே
திரிபுறத்தை என் அம்மா எறிந்தவளே
முக்கண்ணில் தாயே தானெருத்தி
முச்சுடரே என் அம்மா துரௌபதையே
துரியனை என்தாயே தானடக்க
துலங்கினாய் என் அம்மா துரௌபதையாய்
கீசகனை தான் வதைக்க அம்மன்
கிளிமொழியே தாயே பெண் பிறந்தாய்
சங்கரிக்க என்தாயே வந்துதித்த
சமர்த்துள்ள என் அம்மா துரௌபதையே
[ப] ஆமாம் ஆமாம்

மாயிமருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

| | |
|---|---|
| [பூ] வில் வளைத்து மாலையிட்டார் | ஆனந்தமே |
| விஜயனம்மா அர்ச்சுனனும் | ஆனந்தமே |
| கனை தொடுத்து மாலையிட்டார் | ஆனந்தமே |
| கணவரம்மா அர்ச்சுனனும் | ஆனந்தமே |
| பஞ்சவரும் வுன்னாலே தான் | ஆனந்தமே |
| பாரதமும் வுன்னாலே தான் | ஆனந்தமே |
| துரியனை துடை கிழித்தாய் | ஆனந்தமே |
| துலைத்தாயே கீசகனை | ஆனந்தமே |
| மாயனுட தங்கையம்மாள் | ஆனந்தமே |
| மாதாவே துரௌபதையே | ஆனந்தமே |
| ஆட்டு தலைக்காக | ஆனந்தமே |
| ஆயனுடன் வாது செய்த | ஆனந்தமே |

போத்த ராஜன் தன்னுடனே ஆனந்தமே
போர் வீரி வாங்களம்மா ஆனந்தமே
ஐவர் பஞ்ச பாண்டவர்க்கு ஆனந்தமே
அழியாத துரௌபதையே ஆனந்தமே
பஞ்சவர்க்கு தானழியா ஆனந்தமே
பராசக்தி துரௌபதையே ஆனந்தமே
சிங்க வாகனமேறி ஆனந்தமே
சிறப்புடனே வாங்களம்மா ஆனந்தமே
காருமம்மா பெற்றவளே ஆனந்தமே
காரணியே துரௌபதம்மாள் ஆனந்தமே
[ப] ஸ்ரீதேவதா, தேவதா.

வண்ணாரப்பேட்டை உள்ளாறு அம்மன் விருத்தம்

[பூ] ஆராறும் ஒன்ருகி வுள்ளாறு சமயமாய்
ஆதி சகதியானவளும் நீ
ஆகமபுராண இதிகாச வுரைகாணுத
ஆனநத வுள்ளாறும நீ
ஆச்சரியமாகவே உச்சிவெளி வொளிதனில்
ஆடும் உள்ளாறும நீயே
ஆவலாய் உனை போற்ற வண்ணாரபேடுவாழ்
ஆத்தாள வுள்ளாறு வுடையே
கலிமீதில் வுனைநாடி வுள்ளாறு காரென்று
கரகத்தை யேந்தி வருவார்
கண் மூன்றுடையதோர் தேங்கனி வுருட்டியே
கழலிணை தெண்டனிடுவார்
கண்டவர்கள் பூசையிட கனவிலும் நினைவிலும்
கதறிட சூலமேந்தி
கருத்தரியாததோர் மானிட மக்களை
கடுகி அழைவுள்ளாறு அம்மையே
[ப] சத்தியுமை பார்வதியே, சரணம சரணமம்மா

கருப்பண்ண சுவாமி மீதில் சமயநடை பாட்டு

[பூ] அழகர்மலை சுவாமி வாசலிலே
அமர்ந்து வாழும் சுவாமி கருப்பையனே
பழமுதிர் சுவாமி சோலையிலே
பதியமர்ந்த சுவாமி கருப்பையயனே

பதினெட்டாம் சுவாமி கருப்பையனே
பகவான் சுவாமி எழுந்தரய்யா
வேலெடுத்து சுவாமி தோளிலிட்டு
வெளிப்படய்யா சுவாமி காவலிலே
வெள்ளைப் புறவியேறி சுவாமி
வெளிப்படய்யா கருப்பைய்யரே
சந்தனப்பூ மேடை விட்டு
சுவாமிநல்ல கருப்பையா வாருமைய்யா
அஞ்சனத்தில் சுவாமி வல்லவரே
அழகுள்ள தேவா கருப்பைய்யரே
நாகப்பழத்திலேயும் சுவாமி
நல்ல கருப்பழகர்
கோவைப்பழத்திலேயும் சுவாமி
கொஞ்சும் கருப்பழகர்
[ப] கோவை பழத்திலேயும்

[பு] வசன நடை :—

அழகர்மலையானே என் சுவாமி கருப்பண்ணு
அடிமை காவல்வந்து நில்லு
வெள்ளைப் புறவியேறி என் சுவாமி துரையே
விளையாடும் தீபமதல
அஞ்சனத்தில் சுவாமி கொஞ்சி விளையாடும்
அழகுதுரை வந்துநில்லு
கூப்பிட்ட நேரததில் என் சுவாமி துரையே
கொககரிக்கும் குல தெய்வமே
வந்தேண்டாப் பயலே என்னும் கருப்பைய்யசுவாமி
வரம கொடுக்கும் தெய்வமானீர்
[ப] வந்தேண்டாபயலேஎன்னும் கருப்பைய்யசுவாமி
வரம் கொடுக்கும் தெய்வமானீர்

பச்சையர்மன் பேரில் விருத்தம்

[பு] கர்த்தன் விழிமூடி நீ கதிர்மதி யிருண்டிட
கடும்சாபம் பெற்றவளும் நீ
கணவரில்லாமலே தனியாக காசியில்
கரத்திலரம் வளர்த்தவளும் நீ

கதறியே வந்ததோர் மகிடனை வென்றுமே
கயிலைபதி சேர்த்தவளும் நீ
கண்ணனுட வுதவியால் முனிவர்கள் யெழுவருடன்
கலிமீதில பூசை பெற்று
கனவொளி வாழைநகர் திருமுல்லைவாயல் வாழ்
கன்னி பசசை வுமையவளே
[ப] கன்னி பச்சை வுமையவளே போற்றி போற்றி
உன் பெண்ணடிக்கு யான் போற்றி.

பச்சையம்மன் பேரில்
கண்சிவந்து கோபித்தாளாம் என்ற மெட்டு

[பூ] முல்லை என்றால் முல்லையம்மா என் அம்மன்
திருமுல்லை வாழைநகர் தாயே
திருமுல்லைவாயலிலே என் அம்மன்
வளர்ந்தெழுந்த பச்சையம்மாள் தாயே
இலைகளெலலாம் பச்சையம்மாள் அம்மன்
இலைக்காய் பூ வேங்கைநிறம் தாயே
காய்களெல்லாம் பசசையம்மா அம்மன்
காய்க்காய்பூ வேங்கைநிறம் தாயே
மன்னுதர் தேவியம்மா என் அம்மன்
மாதுபச்சை பார்வதியே தாயே
பஞ்சயரைக் காக்குமந்த அம்மன்
பாரநல்ல தவ முனிகள் தாயே
பக்கதுணை காவல்செய்வார் அங்கே
ஏழுநல்ல தவமுனிகள் தாயே
[ப] ஆமாம், ஆமாம்.

நையாண்டி

[பூ] ஏழுமுனி செஞ்ஜைகட்ட இளையமுனி வாளுருவ
வாளுருவி தோளிலிட்டார் வடகடலை பார்வையிட்டார்
கத்தியுருவி தோளிலிட்டார் கருங்கடலை பார்வையிட்டார்
ஏழுமுனி கூடவல்லோ எழுந்திரம்மாள் பச்சையம்மாள்

### விளக்கின் வர்ணிப்பு

[பூ] வசன நடை:—

வாழ் முனியன் கூடவல்லோ என் தாயே
வடிவழகி வாங்களம்மா
மணிவிளக்கு மீதிலம்மா என் தாயே பச்சையம்மா
மாதா எழுந்திரம்மா
எவரெவர் வரும்வேளை என் தாயே பச்சையம்மா
ஏகாந்த தீபமதில்
[ப] எவரெவர் வரும்வேளை

### அயினாரப்பன் மீதில் சமயநடை பாட்டு

[பூ] அரி அரன் தான் சேர்ந்து அய்யா
அவதரித்த அய்யனாரே
அரிவுனக்கு அன்னை அய்யா
அரன்வுனக்கு தகப்பனையா
மோகினி ரூபம் கொண்டு வுன்னை
முன் மடியில பிள்ளை பெற்றார்
பத்மாசூரன் தன்னாலே சுவாமி
பாலனாய் பிறந்தவரே
ஆயிரத்து எட்டு பந்தி சுவாமி
ஆணழகா காப்பவரே
பொற்கலையும் பூங்கலையும்
பொற்கொடி மார் தனனுடனே
கச்சை வரிந்துகட்டி சுவாமி
காவிகச்சை சுங்கு விட்டு
முன் சுட்டி முண்டாசு சுவாமி
முகமெல்லாம ஜோதி மின்ன
வெள்ளைப் புறவியேறி சுவாமி
வெளிப்படய்யா அய்யனாரே
வெட்டருவாள் தோளி லிட்டு
வேதாந்தா வாருமையா
கூட்டம் படையுடனேகொலு அமரே அய்யனாரே
[ப] கூட்டம் படையுடனே.

[பூ] வசன நடை:—

அரிவுனக்கு அன்னை அய்யா அபினரப்பா
அரன்வுனக்கு தகப்பனப்பா
மோகினி ரூபம் கொண்டு என் சுவாமி
முன் மடியில் பிள்ளை பெற்றார்
பத்மா சூரன் தன்னாலே அபினரப்பா
பாலனாய் பிறந்தவரே
பாலன் குறை தீர்க்க இம்மனையில்
பகவானே வந்தமாரும்
அனைவர் ஓர் முகமாய் என் சுவாமி
அரய்யா புண்ணியனே
[ப] அனைவர் ஓர் முகமாய்

கார்த்தவ சுவாமி உற்பத்திசபை வணக்கம்

[பூ] கண்ணிமோகாம்பரி சொக்கர் மீனாட்சிவுமை
கழலினை போற்றி நாளும்
கனகசபையெனும் பெயர் விளங்கும் புத்திர
கனா்மிகும் ஷண்முகச்சீர்
கலியுக மீதினில் தழைத்திட சத்திவேல்
கருத்தினை விளக்கிக் காட்ட
கம்பாநதிக்கரை காமாட்சி பீடம்கார்
கடவுளாம் கார்த்த லிங்கம்
கதைதனை வுரைத்திட பஞ்சாமிர்த மென
கழருவீர் பிழை பொருத்து
[ப] அரகரா மஹாதேவா ஓர் ஓம்.

கார்த்தவசுவாமி உற்பத்தி

## கும்மி வர்ணமெட்டு

ராஜயோகிகள் சித்தர் பலர்களும்
ராயபுரிநகர் வாழ்ந்திலங்கும்
ராமனாதபுரம் மன்னர் வணங்கிடும்
ராஜேஸ்வரி அங்கமுத்து வாழும் 1
பட்டணம் பூசாரி—கனக சபை நாய்க்கர்
பகவதியருளினால் யீன் றெடுத்த

பக்தன் ஷண்முகம் மாணவன் சக்திவேல்
பகரனுள்ளன் கார்த்த லிங்கம் கதை 2

ஆதிசிவனுன ஆளன் மன மதை
ஆரணங்குவுமை சோதித்ததால்
ஆடித் திரிந்திடும் சிற்றெரும்பால் சிவன்
ஆங்கார கோபமாய் சாபம் தந்தார் 3

காசியென்றும் திருக்ஷேத்திரத்தில்—பெண்ணே
காரணி நந்தவன மமைத்து
காலகண்டன்பாதம் தொழுது நின்ருள்—கண்ணே
காந்தாரிவுன் சாபம் நீங்குமென்ருர் 4

சிங்கார வனத்லதை உண்டு செய்து—அம்மன்
சித்திரமண்டபம் அலங்கரித்து
சிவனுர் அளித்ததோர் கார்க்த லிங்கமென்று
சிறுவரை காவல் அமைத்தாளாம் 5

அன்னையாள் சொல்மொழி கேட்டு கார்த்தவரும்
அட்க்ஷணம் நந்தவனம் கார்க்க
அழகு கன்னிமார் எழுவரும் கூடியே
அன்பான பூமலர் கொய்பலுற்ருர் 6

மலர்களை பரித்தெழுவரும் கூடியே
மங்கைமார் கங்கையிலா டையிலே
மல்லிகை காணுத கோபத்தால் கார்த்தானும்
மங்காத ஆடையை தானொளித்தார் 7

தங்கையாள் இளைய கன்னி மறைந்ததை
தட்க்ஷணம் சென்று கைலையிலே
தண்ணீரும் கண்ணீர் கலங்கிட அனைவரும்
தட்சக்ஷணுமூர்த்தியுட னுரைத்தார் 8

எந்நேரமும் தவநிஷ்டை புரிசிவன்
எதிராக கன்னிமார்முகம் பார்த்து
என்ன குறைவந்து நேர்ந்தது உன் தங்கை
எங்கு காணே மென்று தானுரைத்தார் 9

புனலரைந்தோன் வுரைத்தான் கேட்டு—அந்த
புஷ்பம் பரித்ததோர் கன்னிமார்கள்

புண்ணிய மூர்த்தியே வணங்கார்த்தான் ஆடையை
புன்னை மரத்ததின்மேல் தானொளித்தான் 10

என்றுவுரைத்திட ஆதிசிவன் வுமை
எருதேரி நந்தவனமிரங்கி
எங்கெங்கும் தேடி ஞானத்தாலறிந்து
எதிராக நின்று தானழைத்தார் 11

உள்ளம் நடுங்கி முகம் வேர்த்து—அய்யன்
உண்மை மொழியெல்லாம் தானுரைக்க
உனக்கிந்த ஆங்காரம் கொண்டதினால்—இப்போ
உறுதியாய் சாபத்தை தந்தேனென்றார் 12

காற்றான அலகை மறையமறை கழுவாய்
காற்றான் வலையனாய் போவாயென்று
காலனை யுதைத்தோர் சாபமிட அங்கே
காரணி தடுத்து சாபம் நீக்க 13

பர்வதராஜன் மகளான பார்வதி
பத்தாசாபமதை மாற்றிடவே
படியளந்த பரன் சினமது கொண்டங்கு
பதறியே பேயாக போவென்றார் 14

சாபத்தை பெற்று சாம்பலாதேவியும்
சாஷ்டாங்க மாகவே தெண்டனிட்டு
சாற்றெணுகம் பாநதிக்கரையோரம்
சாயபசிவனுரை தவம் புரிந்தாள் 15

கண்மூடி கல்லான மரத்தடியில் அம்மன்
கஞ்சி காமாக்ஷியாய் சடை விரித்து
களிப்புடன் சார்த்தவராயனுக்கு அங்கே
கடுகென கட்டளை ஏதுரைப்பாள் 16

என் மனம்போலவே நாலுபிறப்பு நீ
எடுத்த ஜென்மமும் தான் கழிந்து
என்னிடம தேடி நீ வந்தாலே வுனக்கு
எந்த வரம் கேட்டால் நான் தருவேன் 17

அன்னை வுரைத்த மொழிகேட்டு அங்கே
அன்புடன் பிராமணப் பெணகருவில்

அய்யன் ஜெனனமாகி வெளிவந்து
அட்சணம் கோரைபுல் மீதமர்ந்தார் 18

காராம்பறச்சி மனையிடம் சென்றுமே
காந்தாளமாய் கூவி மனையெறிக்க
காப்பாற்றினல் தீம்பு வருகுமென்ற அப்போ
காளையை பிள்ளையார் கோவில் விட்டார் 19

புத்தி நெறியுள்ள கார்த்தலிங்கம் அங்கே
வெள்ளிமான் புல்லை மேய்கையிலே
புவனமதில் மெச்சபனி நீரைப் போலாக
புனலணிந்தோன் மகன் தானிருந்தார் 20

கலைமானும் புல்லை மேய்ந்திடவே அப்போ
கர்ப்பமாய் அய்யன் தனித்திடவே
கவலை மெத்தவுண்டாகி அழ
கடுகென அய்யன் வெளியானர் 21

தோட்டி அவரையும் கண்டெடுத்து அங்கே
தோளின் மீதில்வாரி வருகையிலே
தோட்டத்தை சுற்றியே சிவப்புடையான் அங்கே
தோளினில் என்னடா வென்றுரைத்தான 22

சுரக்காயிது வென்று தானுரைக்க தோட்டி
சுவாமி இருகாலை தொங்கவிட
சுருக்கா யறிந்து சிவப்புடையான்
சுத்தமாய் பிள்ளையை வாங்கி வந்தான் 23

ஆனந்தமாகவே சிவப்புடையானங்கே
ஆண்டவரை அங்கு வளர்க்கையிலே
ஆரியப்பு ராஜன் தானறிந்து அப்போ
ஆதிமூல ரங்கர் பூசை செய்தார் 24

அழகு கண்ணிவுயிர்தான் பிடித்து ரங்கர்
அய்யர் மனையில் வுதிக்க செய்து
அம்மை ஆரியமாலை யென்று நாமம்
அன்பாகவே பேருமிட்டாராம் 25

கண்ணிபிறந்த பலன் பார்த்து அப்போ
கடுகவே கோட்டைகள் தானும் கட்டி

கண்டிப்பாய் ஆண்வாடை கூடாதென அங்கே
கட்டு திட்டமுடன் காவல் வைத்தார் 26

கன்னி ஆரியமாலை தாதியுடன் இருவர்
கங்கையில் கிரீடை ஆடையிலே
கஸ்தூரி வாடையும் மஞ்சள் வாடைகளும்
கண்ணால் கண்டல்லோ கார்த்தலிங்கம் 27

மாதா மனோன்மணி காமாக்ஷியை தேடி
மாமலரால் பூஜைதானும் செய்து
மாலை மீதில் மிக ஆவல் கொண்டு சுவாமி
மார்போடணைந்திட வரம் கேட்டார் 28

வேதாந்தி காமாக்ஷி வேண்டாம் மகனே நீ
வேதியர் மகளை தொட்டாயானால்
வேதனையுண்டாகும் நீ சென்று கண்ணே
வேறுபெண்ணை பாருமென்றுரைக்க 29

சங்கரி சொன்ன வார்த்தையினால் சுவாமி
சப்பாணியப்பனும் சின்னானையும்
சமர்த்துடன் வென்று சதிராக சுவாமி
சட்டென வண்ணார வல்லியாரை 30

சாந்தழகி யென்னும் பெண்ணாளை சுவாமி
சாமார்த்தியமாக வேரறுத்து
சாம்பவி வரத்தால் உகந்தழகி நல்ல
சாதித்து சிறை தானெடுத்து 31

அன்ன துளசி அருவையரை சுவாமி
அம்மை வரத்தால் சிறையெடுத்து
அழகுள்ள மாலைக்கு வளையவிட்டு அங்கு
அரிராமர் கிருபையால் மணம் முடித்து 32

வல்லத்து மாங்காளி கோவிலை தேடி
வருத்தப் படுத்திட அப்பொழுது
வலலவா நீ சென்று கழுவேறி நின்றால்
வடிவழகி மாலையை அணைவா யென்றாள் 33

காளியிடம் வரம் பெற்றுமே கார்த்தாரும்
கஷ்டத்துடனவர் கம்பாநதி

காமாக்ஷியை தேடி மாலையை காட்டி
காலடிபணிந்தருளுமென 34

அம்மை காமாட்சி மகனை கண்டு
அரன் சாபப்படியே நேருமென
அள்ளி வெண்ணீரை தானளிக்க சுவாமி
அழுகுகழுமரம் ஏறிநின்றார் 35

முகுந்த மாயனுரைப்படிக்கு கைலை
முக்கண்ணன் சிவனார் சாபம தீர்ந்து
முதன்மையாய் கழுமரம் விட்டிறங்கி சாமி
முன் வந்து பரமனை தெண்டனிட்டார் 36

காமனை எரித்த சிவபெருமானங்கே
கார்த்தலிங்க சுவாமி முகம் நோக்கி
கார்கை நால்வர் மங்கையை திருமணம்
காளையே நீ முடியென்றுரைத்து 37

தேவகணங்களை தானழைத்து சுவாமி
தேவியர் நால்வரை குந்தவைத்து
தேடக்கிடையாத சிவபெருமானங்கே
தேவனுக்கு மணம தான் முடித்தார் 38

திருமணம் முடித்து நால்வருமே சாமி
திருச்சி நகர்தனில் வாழ்ந்து வந்த
தித்திக்கும் செங்கரும்பான ருசிபோல
தினம் தினம் படிக்கவோதி வைத்தேன் 39

கண்டவர் புகழும் ராயபுர நகர்
கனகசபை மைந்தர் ஷண்முகம்சீர்
கலியுகம மீதினில் சத்திவேல் பாட
களங்கமிலாமலே ஓதிடுவீர் 40

சென்னை வண்ணாரப்பேட்டை உள்ளாறு அம்மன்பேரில்
கண்சிவந்து கோபித்தாளாம அம்மன்

[பூ] ஆதியிலே வண்ணார்கள் என்னும்
ஆண்டிருந்த எல்லையிலே தாயே
அந்தமிகு சுந்தரியாய் அம்மன்
அவதார வுள்ளாறு தாயே

வண்ணார்வாழ் பேட்டையிலே அம்மன்
வந்துகோவில கொண்டமர்ந்தாள் தாயார்
எல்லைக் கதிகாரி நான் என்று
எழுந்தாயம்மா வுள்ளாராக தாயே
தென்கரையில் வுள்ளாறு அம்மன்
வடகரையில் சேணியம்மா தாயே
இருவர்களும் வண்ணார்வாழ் பேட்டை
இருந்து பூசை கொள்ள வந்து தாயார்
கடையாம நல்ல கடைவீதி தன்னில்
கண்டவர் கரங்குவிப்பார் தாயே
எடுத்துமுதல் கெருடஸ்தம்பம் மீதில்
எல்லவரும் கொடியேற்றி அங்கே
எட்டு நாள் கொட்டியம்மா தாயே
எடுத்து பறை சாற்றிடுவார் அம்மன்
காப்பு கட்டி பொங்கலிட்டு தாயே
காருமென்று தொழுதிடுவார் அம்மன்
பத்துநாள் உற்சவங்கள் தாயே
பரைந்து செய்து போற்றிடுவார் அம்மன்
[ப] ஆமாம் ஆமாம்,

துரௌபதையம்மன் பேரில் பாட்டு

[பு] தேடியழைக்குறேனே உன்
திருமுகத்தைக்காண இங்கே
எங்கேயோ பாராமுகம் தாயே
இவ்விடம் ஏகாந்தம்
ஒருகுலமா இருகுலமா அம்மா
ஐவர் குலம் என் தாயே
பெற்றாளே குந்தியம்மாள் உனக்கு
பேருமிட்டார் மாயவரும
வளர்த்தாளே குந்தியம்மாள் அங்கே
வரிசையிட்டார் மாயவரும்
காண்டாவன மெரித்த அந்த
காண்டீபன் தேவியரே
ஐவருக்கு தேவியம்மா தாயே
அழியாத துரோபதையே

காடுபோன பாண்டவர்க்கு
கூடபோன தேவியரே
ஐவர் ஒருமன தாய் — தாயே
ஆத்தாளே வந்தமரும்
[ப] ஐவர் ஒருமன தாய்

அம்மன் திருவிளையாடல் வர்ணிப்பு

ஐயே ருனக்தமாட எனதம்மாளும் பூங்காவனத்தாளும்

மாட என்ற மெட்டு

[பூ] சத்தி சதாசிவனோட — அம்பாள்
சங்கரியும் வேணரூபம் கொண்டாளே மாது
அங்காள ரூபமானாளே — மலையனூரில்
ஆடினாள் சுடலையில் யாவரும் ஓட — (ச)
மகிடா சூரனை வென்றாள் — அங்காளவுமை
மண்டலத்தில யாவர்களும் கண்டு பூசைகொள்ள
ரேணுகை நாமம் பூண்டாளே — அம்மன்
கார்த்த வீரியரை கருவறுத்தாளே — (ச)
பரசுராமர் தாயுமே நல்ல — சன்னதி
படவேட்டில் அமர்ந்தாளே பூசை கொள்ள அங்கே
மாரியென்று உருவம் பூண்டாளே — சத்தி
காளி ரூபம எடுத்தாளே கண்டவர்கள் வாட — (ச)
பேரான மாரிமுத்து தாயே — அம்மன்
பெரிய பாளையத்தில் அமர்ந்தாளே மாது
சந்துக்கு சந்துகள் எல்லாம் — அம்மா
சந்தியம்மா சேணி என்று நாமம் பூண்டாளே — (ச)
குண்ணத்தா துலுக்காணம் என்று — அம்பாள்
கும்பிடும் தெய்வமாக கொண்டாளே பேரு
கீர்த்தி பெற்ற எங்கள் குலதெய்வம் — அம்மன்
கோரினவர்களுக்கு குறை ஒன்றும் இல்லை — (ச)

பூசாரி வசன நடை:—

எழுவர் ஒருமன தாய் — மனோன்மணி தாயே
எழுந்தாயா தீபமதில்

தூங்கி எழுந்ததைபோல் அனைவர் ஒரு முகமாய்
துள்ளி விளையாடனுமே
என்ன குறை நேர்ந்தாலும் காமாக்ஷி தீபமதில்
எடுத்துரைக்க வேணுமிங்கே
தொமபரை பொன்னது போல் குழந்தை என்முன்
கொஞ்சு விளையாடனுமே
வந்தேண்டா மகனே என்று என் தாயே நீ
வரங்கொடுக்கும் வேளையிங்கே
[ப] வந்தேணடா மகனே என்று

மதுரை கூண்பாண்டியனுல் சமணரை கழுவேற்றிய
அண்ணன்மார் பேரில் வர்ணிப்பு
ஆரா பெருமணளாம் தாயே பெருமணளாம் - என்ற மெட்டு

[பூ] சமணரை கருவறுக்க சாமி கருவறுக்க
சண்முகனுர் நீ அல்லவோ சாமி நீ அல்லவோ
[ப] அரகரா அரகரா
[பூ] சம்மந்த மூர்த்தியானுய் சாமி மூர்த்தியானுய்
சமணரை வெற்றிகான சாமி வெற்றிகான
[ப] தேவதா தேவதா
[பூ] வீரபத்ரர் இருவருமே சாமி இருவருமே
இருவர்கள் ஒன்றுகூடி சாமி ஒன்றுகூடி
[ப] ஆமாம் ஆமாம்
[பூ] உலகமாதா உதவிகொண்டீர் சாமி உதவி கொண்டீர்
சமணர்படை கள்ளரெல்லாம் சாமி கள்ளரெல்லாம்
[ப] ஆமாம் ஆமாம்
[பூ] கடவுளின் கட்டளையாம் சாமி கட்டளையாம்
கண்டதுண்டம் செய்துவிட்டீா சாமி செய்துவிட்டீர்
[ப] ஆமாம் ஆமாம்
[பூ] சின்ன அண்ணர் பெரியண்ணனும் சாமி பெரியண்ணனும்
மாறுவேடம் கொண்டீரையா சாமி கொண்டீரையா
[ப] ஆமாம் ஆமாம்
[பூ] மாண்டார் சமணரெல்லாம் சாமிசமணரெல்லாம்
மானிடர்கள் பூசைகொள்ள சாமி பூசைகொள்ள
[ப] ஆமாம் ஆமாம்

[பூ] வசன நடை விளக்கின் வர்ணிப்பு:—

பெரியண்ணன் சின்னன்னுக காமாக்ஷிகைவிளக்கில்
பிரியம் கொண்டு வந்தேனென்று
பூரித்து பொங்குமைய்யா புண்ணியரே நீங்கள்
பூசைமுகம் தானமர்வீர்
[ப] பூரித்து பொங்குமைய்யா

பெரியாண்டவர் பேரில் விருத்தம்

[பூ] சர்வசராசர வொளிபாகி பதியினில்
சகலவுயிர்கார்க்கும் சிவமே
சனகாதி நால்வர் முனி செவியதில் வோதியே
சட்டமுனியான சிவமே
சடைமுடி கொங்கையுடன் அரவமே துலங்கிட
சங்கர்ரான சிவமே
சங்கத் தமிழ் மதுரை சொக்கலிங்கேசருய்
சகலவரம் தருகும் சிவமே
சண்முகணேங்கரன் பார்வதி சமேதராய்
சாய்ந்தாடும் மன்னுத சிவமே
[ப] ஓம் ஓம் அரகரா ஓம் நமசிவாயா

எம்பெருமான் வாழ்முனியாக வந்த வர்ணிப்பு

ஆங்காரரூபமானுல் அம்மன் என்ற மெட்டு

[பூ] ஆதிவொரு காலமதில் அம்மன்
ஆதி சிவன்முகம் நோக்கி அங்கே
ஆதவனும் மதியவனும் யாரு
ஆ ணகு முன்னுரையும் என்ருல்
அந்தவுரைதான் கேட்டு அய்யன்
அறுணனும் நான் சநதிரன் நான் என்ருர்
ஆளன்வுரை தான் கேட்டு அம்மன்
ஆராய்ந்து தெரியச் சொல்லும் என்ருள்
ஈஸ்வரி சொன்னவாககை கேட்டு
ஈஸ்வரனர் எடுத்துரைக்க அஙகே
பெண்ணே பெண்ணே பார்வதியே கேளும்
பெருமாளின் சொந்த தங்கை கண்ணே

வலதுகண்ணு சூரியன் தான் பெண்ணே
இடதுகண்ணு சந்திரன் தான் கண்ணே
என்றுரைத்தார் பார்வதிககு சிவனார்
எதிராக தட்க்ஷணாமூர்த்தி அய்யன
அந்தசேதி கேட்டல்லவா அம்மன்
அம்பிகையும் சோதிக்க அப்போ
சுவாமி இரு கண்ணை மூடி அம்மன்
சுந்தரியாள் காணும நேரம் அங்கே
சராசரங்கள் யிருள்சூழ அப்போ
சங்கரியாள் நடு நடுங்கி நின்றாள்
[ப] ஆமாம், ஆமாம

ஆராபெருமணலாம் சாமி பெருமணலாம் என்ற மெட்டு

[பூ] தேவலோகம் கருத்திடவே சாமி கருத்திடவே
தேவரெல்லாம் தான் நடுங்கி அய்யா தான் நடுங்கி
காடு மலையில் செடியில் வாழும சாமி செடியில் வாழும
காக்கை கரடி மிருகமெல்லாம அங்கே மிருகமெல்லாம்
கறிநிறம் போல் தான் கறுத்து சாமி தான கறுத்து
கர்த்தரையும் தொழுகையிலே அப்போ தொழுகையிலே
குய்யோ முறையோவென்று அங்க முறையோவென்று
குருபரனை தொழுகலுற்றார் சாமி தொழுகலுற்றார்
அந்தசத்தம் கேட்டாரே சாமி கேட்டாரே
அரனும் பரமசிவம் அப்போ பரமசிவம்
பார்வதியை பார்த்தல்லவா சாமி பார்த்தல்லவா
பரமரவர் ஏதுரைப்பார் சாமி ஏதுரைப்பார்
இருகண்ணை விட்டுவிடு பெண்ணே விட்டுவிடு
இளபமுள்ள பெண்ணனங்கே மாதே பெண்ணனங்கே
கண்ணையிரண்டும் மூடினதால் இப்போ மூடினதால்
கலங்குது உலகமெல்லாம கண்ணே உலகமெல்லாம்
சித்தர்கள் மனம் கொதிக்க நீ மனம் கொதிக்க
சிற்பரியே நீ செய்ததினால் கண்ணே செய்ததினால்
பிடியடி சாபமென்றார் அப்போ சாபமென்றார்
பிஞ்சகனார் பார்வதியை தான் பார்வதியை

அந்தவுரை கேட்டாளாம் அம்மன் கேட்டாளாம்
அம்பிகையும் ஏதுரைப்பாள அங்கே ஏதுரைப்பாள்
[ப] ஆமாம ஆமாம்

இரட்டை அடி சீர் நடை

[பூ] என்ன சாபம் சுவாமி தருவீரய்யா
எனக்குறையும் சிவபெருமான்
என்றுரைக்க அங்கே பார்வதியாள்
எடுத்துரைப்பார் அப்போ ஆதிசிவன்
காசியிலே பெண்ணே கால் நடையாய்
காரணியே நீ தனியே சென்று
தருமம் நல்ல முப்பத்திரண்டு
தருக வேண்டும் பெண்ணே தனியாக
பன்னிரெண்டு பெண்ணே தன்வருடம
பரமர்தவம் கண்ணே செய்பவேணும்
இப்படிக்கு தர்மம் செய்து வந்தால
இச்சாபம பெண்ணே நீங்குமடி
தேவர் மனம் தான் குளிரும்
தேவியரே என்றுரைத்தார்
அந்த சாபம் அபமன் பெற்றல்லவோ
அம்மையரும் அங்கே நடக்கலுற்றார்
காசிபதி அம்மன் தான் நடந்து
கடுகனவே அம்மன் பழணமானள்
இருபக்கம் தாதியுடன்
இன்பமாக அம்மன் வாராளே
தனிவழியாய் அமமன் ஏகிவாராள்
தட்க்ஷணியால் வுமை பார்வதியாள்
[ப] ஆமாம ஆமாம்

கொம்மி

[பூ] அகஸ்தியர் கௌதமர் துர்வாசர் வனமும்
அம்மை கண்டு போற்ற தான் நடந்து
அண்டர் முனிவர்கள் வணங்கிட பார்வதி
அழகுள்ள காசி பதி நடந்தாள்

அரம் வளர்த்துமே காசியிலே அம்மன்
அழகிய நந்த வனமமைத்து
அண்டசராசரம் தான் படைத்த அம்மன்
அதிர்ந்திட வுலகில் வருகையிலே 2

அந்தரவீரனும் ஆகாய வீரனும்
அசமிலாமலே பவனிவர
அபமை நடை அலங்காரமதை கண்டு
அதட்டியே யாரென்று தானிருத்தி. 3

அடடாவுனைப்போல மன்மத வுல்லாசி
அழகினில் இவ்வுலகில்லை யென்று
அண்ணனுக கேற்ற மனைவியாள் நீயென
அழைத்திட அப்போது வீரர்களும். 4

அஞ்சாத வஞ்சக நெஞ்சக வீரரை
அனல் கொண்டு இச்சேதி கேட்டு அம்மன்
அடாத வார்த்தையை வுரைக்காதீர் நீரும்
அண்ணுவே என்றுவுரைக்க லுற்ருள். 5

[ப] ஆமாம், ஆமாம்.

குறவஞ்சி நடை

[பூ] அம்மனை கண்டு வீரர் தான் மறித்து அங்கே
தான் மறித்து அஙகே
அண்ணனுக் கேற்ற ராணியாகுவாய் நீ யென்ருர். 1

வீரர்களும் வுரைத்த மொழி கேட்டு நல்ல அம்மன்
கேட்டு நல்ல அம்மன்
வீரவதி கோபமாகி ஏதுரைப்பாளங்கே. 2

என்னைப்போல் தங்கைமார்கள் வுங்களுக்கு அண்ணு
உங்களுக்கு அண்ணு
இவ்வுலகில இலலையோ சொல் மறிக்காதே யென்ருள். 3

பார்வதியாள் சொன்ன சேதி பாபிகளும் கேட்டு
பாபிகளும் கேட்டு
பாசாங்கு பேசவேண்டாம் வாருமடி யென்ருர். 4

தனிவழி போகையிலே தர்மமதை வளர்க்க அப்பா
தர்மமதை வளர்க்க
தடுக்க எண்ணம் கொள்ளலாமா பாபம் நேருமென்றால். 5
தடுத்து பேசுவார் சதை தன்னை தனியாக விட்டுபெண்ணே
தனியாக விட்டு பெண்ணே
தமையனுடன் வாழ்ந்திடுவாய் வாருமென்றாரங்கே. 6
ஏதேதும் எடுத்துரைத்தும் வாதாட வீரரங்கே
ஏகிவரும் நேரமங்கே பார்வதியு மப்போ. 7

[ப] ஆமாம் ஆமாம்.

கண்சிவந்து கோபம் கொண்டாள் அம்மன் என்ற மெட்டு

[பூ] பாப புண்யம் எடுத்துரைத்தும் அம்மன்
பாவி வீரர் கேட்கவில்லை யங்கே
வாதாடி வீரருடன் அம்மன்
வாராளே பார்வதியா ளப்போ
கண்டாரே வீரர்களும் அங்கே
கடுகவந்து தான்மறித்தா ரப்போ
விடமாட்டோம் விடமாட்டோம் பெண்ணே
வீரரண்ணர் அழைக்க சொன்னு ரென்றார்
அழகினில் மிகுந்தவளே பெண்ணே
அண்ணனுக்கு ஏற்றராணி என்றார்
இந்த வார்த்தை யீஸ்வரியாள் கேட்டு
இவ்விடத்தில் யாரில்லையோ என்றாள்
கூக்குறல் இட்டாளே அம்மன்
கூசாத முனிவரெல்லாம் வந்தார்
வீரரும் முனிவர்களும் அங்கே
வீரமுடன் போர் புரிய அப்போ
மூர்ச்சையது தானடைந்தார் அங்கே
முனிவர்களும் வீரர்டம அப்போ
அந்த நல்ல சமயத்திலே அம்மன்
அண்ணன் மாயன் தன்னை நினைத்தாள் அப்போ
எம்பெருமான் வாழ் முனியாய் வந்து
எதிராக தங்கை முன்னே நின்றார்

[ப] ஆமாம் ஆமாம்.

நையாண்டி

[பூ]முனிவர்மூர்ச்சைபாகிடவே முக்கண்ணியாள் ஏது செய்
அண்ணனந்த மாபவனை அம்மையரு தானழைத்தாள்[தாள்
தங்கை குறல்கேட்டு தரணியை!யளந்தவரும்
அண்டபுஜமுடனே அதிர்ந்திட பேருருவாய்
அண்ட சராசரமும் அகிலமெல்லாம வுருவாகி
மட்டம்புஜம் படைத்து மன்னளந்த மாயவனுர்
வாழ் முனி யரசராக வாரரே தங்கையிடம்
பார்வதிக்கு முன்பாக பார் அளந்தோன் ஏது செய்தார்
பாரளந்தோர் வந்தல்லவா வீரர்களை தான் வகைத்தார்
வீரவதியாள் முன்பாக சண்டாள வீரர்களை
சங்கரித்தார் வாழ் முனியும் தங்கையர்க்கு வுதவியாக
தயாள குண எம்பெருமான் தன்பதுக்குஏகிவிட்டார்

[ப] ஆமாம் ஆமாம்.

ஆங்கார ரூபமானுள் அம்மன் மெட்டு

[பூ] வெள்ளெறுக்கங் கண்காடு வெட்டி அம்மன்
முல்லைவனம் கோட்டை கட்டி அங்கே
காடு வெட்டி முள்பொறுக்கி அமமன்
கட்டி வைத்தாள் நந்தவனம் அங்கே
மேடுவெட்டி முள் பொறுக்கி அமமன்
முலலை வனம உண்டு பண்ணுள் அங்கே
முல்லை யென்று முல்லையம்மா தாயே
திரு முல்லையாம வாழைநகர் அங்கே
திருமுல்லை பதியாளே அமமன்
திருநடன பச்சையம்மாள் மாது
அண்ணமார் முனிவர் ஏழு பேர்கள்
அதிகாரம் செய்துவர அங்கே
வாழ்முனி கூடவல்லோ அமமன்
வாட்டமாக கோவில் கொண்டாள் அங்கே
மூலகுருநதராமே அய்யன்
முதலமேடை மன்னலிங்கம் சுவாமி
அரையில் குருநதராமே அய்யன்
அம்பலத்தில மன்னலிங்கம் சுவாமி

மன்னுதர் கைக்கிளியே — அம்மன்
மனோன்மணியே பசசையம்மா — தாயே
ஒன்டிவீரர் தன்னுடனே — அம்மன்
ஓங்காரி பச்சையம்மாள் — வாராள்
காருமம்மா பெற்றவளே — அம்மன்
கண்மணியே பசசையம்மா — மாதா
[ப] காருமம்மா பெற்றவளே.

பெரியாண்டவர் மீதினில் விருத்தம்

[பூ] அரசர் சேரர் சோழர் பாண்டியர் மதுரையில்
அட்டாளும் சொக்க லிங்கம்
அறுபத்து நான்கு திருவிளையாடல் காட்டியே
அவனியில் நின்ற லிங்கம்
அகமபுரிச மூணரை யழிக்க வேசம்]பந்தரை
அளித்திட வந்த லிங்கம்
அன்புடைய வாணிச்சி பிட்டுதனை வுண்டுமே
அடிபட்ட தர்ம லிங்கம்
அயன் சிரம் கிள்ளியே சுடலையிலாடிய
அம்பலத் தாடும் லிங்கம்
அதிகார மந்திமேல் பதியமர்ந் துலகெல்லாம்
அடியவரை காக்கும் லிங்கம்
அரவுடன் ருத்ராட்ச புலிதோலும் மழுமானும்
அணிந்துகுறி காட்டும் லிங்கம்
அங்கபமையுடன் பொங்க மங்களமாய் வரும்
அய்யன் பெரியாண்டி லிங்கமே லிங்கம்.
[ப] அங்கபமையுடன்

சமய நடை சீர்

[பூ] பேரில்நல்ல பெருத்தவராம் பெரியாண்டி சுவாமியாராம்
உருவில்நல்ல பெருத்தவராம் உலகளந்த மாயாண்டி
உத்தராட்க்ஷம் தரித்தாண்டி உத்தமராம் மாயாண்டி
பத்திராக்ஷம தரித்தாண்டி பரமரல்லோ மாயாண்டி
மாரனை வதைத்தாண்டி மாடேறும் மாயாண்டி
அங்கதனை எரித்தாண்டி அரனல்லவா மாயாண்டி

சடையை விரித்தாண்டி சங்கரனும் மாயாண்டி
முப்புரத்தைஎரித்தாண்டி முக்கண்ணனும் மாயாண்டி
சிரித்துபுரம் எரித்தாண்டி சிவனல்லவா மாயாண்டி
கங்கைநல்லதரித்தாண்டி கண்டனல்லோ மாயாண்டி
காலனையும் உதைத்தாண்டி காலகண்ட மாயாண்டி
[ப] ஆமாம், ஆமாம்.

மாயிமருளியம்மா ஆனந்தமே என்ற மெட்டு

[டு] பிறந்த பிள்ளை முடிவாங்கும் ஆனந்தமே
பிரியமுள்ள பெரியாண்டி ஆனந்தமே
ஆயிரத்து எட்டு லிங்கம் ஆனந்தமே
ஆகிநின்ற மாயாண்டி ஆனந்தமே
சிறுத்தொண்டன் பிள்ளை கறி ஆனந்தமே
சிறப்புடனே உண்ணுண்டி ஆனந்தமே
வள்ளாளன் பிள்ளையாக ஆனந்தமே
வந்துதித்த மாயாண்டி ஆனந்தமே
நால்வருக்கு முத்தி தந்த ஆனந்தமே
நாதாந்தன் மாயாண்டி ஆனந்தமே
பதினெட்டு சித்தருள்ளம் ஆனந்தமே
பட்சமுடனமர்ந்தாண்டி ஆனந்தமே
அறுபத்து மூவருக்கு ஆனந்தமே
அமிர்தம் பொழிந்தாண்டி ஆனந்தமே
ஆனையுரி போர்த்சினுண்டி ஆனந்தமே
ஆதிசிவன் மாயாண்டி ஆனந்தமே
புலித்தோலணிந்தாண்டி ஆனந்தமே
புனலணிந்தோன் மாயாண்டி ஆனந்தமே
குண்டோதரன் தனையழைத்து ஆனந்தமே
குறையா வைகை தந்தாண்டி ஆனந்தமே
தாருகா ரிஷிகளையும் ஆனந்தமே
தானழைத்து துடியாண்டி ஆனந்தமே
[ப] ஆமாம் ஆமாம்.

ஆனந்தகளிப்பு என்ற மெட்டு

[டு] உத்திராட்க்ஷம் தரித்த சிவனுட—பொல்லா
உளளங்காவின் முயலக சூரனுமாட

உச்சி சடை தன்னில் கங்கையுமாட—மந்த்ர
உடுக்கை யெனும் பஞ்சாக்ஷர ஓங்காரமாட (உ)

பத்ராக்ஷ தாவடமுமாட—தெய்வ
பக்தர்கள் அரோகராவென்று ஜெயம்பாட
பரந்தாமன் பிர்ம்மனுமாட—பக்கம்
பதஞ்சலி யிருவர்கள் கைத்தாளம் போட (உ)

தில்லைவன நடன மாயாண்டி—இந்த
திசையெலாம் புகழுவே பரவி நின்றாண்டி
திரிசூரன் தன்னை யெரித்தாண்டி—ஆதி
தில்லை காளியுடனாடி ஜெயத்தைப் பெற்றாண்டி (உ)

கள்ளால மரத்தடியாண்டி—தக்ஷனை
கண்மூடி மூர்த்தியாய் தவம் புரிந்தாண்டி
கண்ணிவன திருமலைக்காக—கடம்ப
கற்பூர நிழலினில காக்ஷி தந்தாண்டி (உ)

ஆலகாலமுண்ட லிங்கம்—சோதி
ஆயிரத்து யெட்டு யிதழான லிங்கம்
ஆகமவுயிர்களுக்கெல்லாம்—உள்ளே
ஆடும பரஞ்சோதி ஆத்தும லிங்கம். (உ)

ஆனந்த மெட்டு

[பூ] தில்லை நந்தனுருக்காக ஆனந்தமே
திருநடனம் காக்ஷி தந்தீர் ஆனந்தமே
காரைக் காலம்மையர்க்கு ஆனந்தமே
காக்ஷி தந்தாய் ஆலங்காட்டில் ஆனந்தமே
மார்க்கண்ட முனிவருக்கு ஆனந்தமே
மாறிடா வயதளித்தீர் ஆனந்தமே
மலையத்துஜபாண்டியருக்கு ஆனந்தமே
மருமகனாய் காக்ஷி தந்தீர் ஆனந்தமே
தாயாராய் வந்தல்லவா ஆனந்தமே
தான் காத்தீர் மருத்திச்சியாய் ஆனந்தமே
பன்றிக்கு பால் கொடுத்த ஆனந்தமே
பரமரல்லவோ மாயாண்டி ஆனந்தமே

நாரைக்கு முக்தி தந்த ஆனந்தமே
நாதராம் மாயாண்டி ஆனந்தமே
கருங்குருவிக்கு உபதேசம் ஆனந்தமே
கருத்தினில் உரைத்தவரே ஆனந்தமே
நீர் காக்கைக்கு வரம கொடுத்தீர் ஆனந்தமே
காரைக் காட்டு அம்மையர்க்கு ஆனந்தமே
காட்டினுப் சிவலோகம் ஆனந்தமே
திருவள்ளுவ நாயனுர்க்கு ஆனந்தமே
திருநடனம் காட்டி நின்றீர் ஆனந்தமே
[ப] திருவள்ளுவ நாயனுர்க்கு

அங்காளமமன் விருத்தம

[பூ] ஞாயிறு திங்கள் செவ்வாய்
நற்புதன் வியாழம் வெள்ளி
வெள்ளிக்கிழமையிலே
திருவேந்திர ஒளிகாப்பு
அண்ணமிக சொரியுமங்கே
அகிலாண்ட ஈஸ்வரிக்கு
எங்கள் அங்காள பார்வதியே
இங்கே அடிமை காவல் வந்து நில்லே
[ப] எங்கள் அங்காள பார்வதியே

அங்காளம்மன் உற்பத்தி சுருக்கம்

கண்சிவந்து கோபித்தாளாம் அம்மன் என்ற மெட்டு

[பூ] ஆதிநல்ல கயிலேயிலே அய்யன்
ஆதிசிவன் கொலுயிருக்கும் போது
முப்பத்து முக்கோடி தேவர்
முனிவர்படை சூழ்ந்திருக்க அங்கே
நாற்பத்து எண்ணுயிரம் சித்தர்
நவகோடி முனிவர்களும் சூழ
குண்டோதரன் குடையேந்தி நிற்க
குபேரனும் தான் பொக்கிஷத்தை தாங்க
அஸ்வத்தாமன் தமபுருவை மீட்ட
அதிகாரநந்திதேவர் காக்க

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

நாரதரும் வீணைமீட்டி பாட
நாட்டியங்கள் கூறி மாதர் ஆட
பிரிங்கிரிஷி மூன்றுகாலால் துதிக்க
பிரியமுடன் மாயன் தாளம் கொட்ட
ஆனைமுகன் ஆறுமுகன் ஆட
ஆகாய கெந்தர்வர்மலர் கொட்ட
அட்டதிக்கு பாலகர்கள் கார்க்க
அண்டரெல்லாம் அரகராவென பார்க்க
இப்படி இருக்கும் கைலை தன்னில்
இன்பமாக இருவர்களும் அங்கே
பரமனும் பார்வதியும் அங்கே
பரவிகொலுவிருக்கும்போது அப்போ
[ப] ஆமாம், ஆமாம்.

நையாண்டி

[பூ] அந்த சமயத்திலே அகமுடனே துர்வாசர்
அரனுரைநோக்கியல்லோ அன்புடனே ஏதுரைப்பார்
எனக்கொருவரமும் வேண்டும் என்றுரைத்தார் துர்வாசர்
எல்லாம் அளிக்கும் சிவன் எதுவேண்டுமென்றுரைத்தார்
அந்தசேதி கேட்டல்லவா அகங்கார துர்வாசர்
கோகத்திலே ஏழு முழம் கொடுக்கவேணுமென்றுரைத்தார்
சினத்திலே ஏழு முழம் சிவனாரே தாருமென்றார்
அப்படியேதந்தேனென்றார் அம்பிகைமனோகரனும்
சிவன் வரத்தை பெற்றல்லவா சினமாக வாராரே
இப்படியாக வாராரே இவரிருக்கும் சமயத்திலே
ஒருநாள் தனந்தனியே உளகளந்தோன் புத்திரனார்
சத்தியலோகமதில் சதுர்முகனு வீற்றிருக்க
அந்த சமயத்திலே அகங்கொண்ட துர்வாசர்
பிரம்மன் சபைதனிலே பிரியமாக வந்து நிற்க
மறையோன் மதியாததால் மகாகோபம் கொண்டல்லவா
சாபங்கள் தந்தாரே சதுர்முகனார் பிரம்மனுக்கு
என்ன சாபம் தந்தாரே எதிராக துர்வாசர்
பரமருடகரத்தாலே பஞ்சுசிரசு ஒன்றில்
ஒரு சிரசுசிலவியல்லோ ஒருமிக்கபோவாயென்று

Srikanthaluxumy.
11/21, Inuvil West
Chunnakam

சாபமது தந்தாரே சாம்பவன் வரம் பெற்றவரும்
அந்தசாபம் தந்தல்லவா அதிவேகமாய் போய் நடந்தார்
இப்படியாகவல்லோ இருக்குமந்த நாளையிலே
[ப] ஆமாம், ஆமாம்

நொண்டி சிந்து

[பூ] கஞ்சனும் ஓர் தினத்தில் கர்த்தரும்
கண்மூன் றுடைய சிவன் தனைக்காண
கயிலைபதி யேகிவர ஈஸ்வரி
கண்டாளே ஆதி சக்தி பிரம்மதேவனை
அந்த சமயமதில் அம்மையுமை
ஐந்து சிரம் இருப்பதால் சிவனென்று
திடுக்கிட்டு எழுந்திருந்து பிரம்மனுக்கு
அடிபணிந்து பூசித்துமே கோபமே கொண்டாள
மறையோன் மிக நடுங்கி அம்மையே
மன்னிக்க வேண்டுமென மனம் கலங்க
சிவனும் வந்திடவே வுமையவளும்
சிரமவணங்கி தெண்டனிட்டு கரம் குவிக்க
அளவில்லா கோபம கொண்டு சிவபெருமான்
அட்க்ஷணமே பிரம்மன் சிரம் தான் கொய்ய
பிரம்ம அஸ்தி தான் பிடிக்க சிவனுக்கு
பித்துக் கொண்டு சுடலையெல்லாம் தான் ஆட
வுமையவள் கண்டு மங்கே அண்ணன்
வுலகலந்தோன் மாயனிடம் சேதி சொல்லவே
அவருடைய போதனையால் அண்ணமிட
அம்பாளையும் பிடித்திட சாபமது
சிவனும் அம்பாளுமே இருவரும்
அண்டபிண்டம் யாவும் சுற்றி வலமாய் வந்து
வேகா சுடலைதன்னில் இருவர்
விளையாடி சுடலையில் நடனங் கொண்டார்
தினமும் தினதினமும்

காந்தாரி ரூபமானாள் அம்மன் என்ற மெட்டு

[பூ] கயிலைபதி தேடியம்மன் வருக
கண்டாரே பரமசிவன் அங்கே

பெண்ணே பெண்ணே பார்வதியே    கேளும்
பெருமையாக நானுரைப்பேன்    கண்ணே
தாழனூர் ராமனுக    புரம்
தாஸ்டீகமாய் கூவத்தூரை    சுற்றி
ஆலங்காடு குன்றத்தூரை    சுற்றி
ஆதிசக்தி எருமை வெட்டி    பாளையம்
சித்தமாம் பக்கம் வுய்ய    நாடும்
சிறப்புடனே ராயபுரம்    தங்கி
மலையனூர் ஏரியிலே    வந்து
மல்லாந்து நீ படுப்பாய்    பெண்ணே
குழந்தை வுருகொண்டல்லவா    நீயும்
குருபரியே நீயிருந்தால்    வுன்னை
வலைவீசும் நாட்டினர்கள்    கண்டு
வணங்கி உன்னை தானெடுத்து    ஏங்கி
அங்கம்மா ளென்று சொல்லி    உன்னை
அடிதொழுது தான் வளாப்பார்    என்றார்
ஜலகாலம சென்ற பின்னல்    நானும்
சிறப்புடனே மாலையது    சூட
வந்து மணம் தான் புரிந்து    பெண்ணே
வடிவுடையாள் உனையழைத்து    செல்வேன்
என்றுரைத்தார் ஆதிசிவன்    அங்கே
எதிராக பார்வதுக்கு    அய்யன்

[ப] ஆமாம், ஆமாம்.

கொம்மி மெட்டு

பத்தா சொன்ன மொழிதான் கேட்டு அம்மன்
பக்ஷமுடன் உலகில பேர் விளங்க

பக்குவமாக பிரம்மன் மண்டை யேந்தி
பல தேசம் சுற்றியே வாராளே 1

கணவர் சொல் தட்டாத பார்வதியாளங்கே
கலிமீதில் பலவித நாமங் கொண்டு

கரத்தினில் சூலமும் கபாலமும் கொண்டுமே
கருத்த சடைவீசி ஆடி வாராள்

ஆங்கார சிங்கமதை அடக்கி அம்மன்
ஓங்கார சப்தமாய் முதுகேறி
ரீங்கார பிரணவ சொர்ப்பணத்தி அந்த
சிங்கார பீடத்தில் குடியமர்ந்தாள் 3

குடகுமலை கொச்சி ராமனுதபுரம் சுற்றி
குமரியாள் நல்ல பகவதியாள்
குடிபடை வாழும் மானிட மக்களை
குறைவன்றி பேர்வாங்கி தெய்வமானுள் 4

பொன்னேரி என்றிடும் மலையனூரில் அம்மன்
பொருந்தினுள் பேரீச்சமரத்தடியில்
பொல்லாவினைகளை தீர்த்துமே புற்றினுள்
பொய் சொல்லா மெய்யரை காற்றுவாராள் 5

சமயநடை இரட்டைசீர்

[பூ] ஏரி என்னு அங்கம்மா ஏரியம்மா
இருகரையும் தாயே பொன்னேரி
தணணீர் வந்தா அங்கம்மா நிறம்பாது
தாழனூறு தாயே ஏரிகரை
ஏரிகரை அங்கம்மா மூலையிலே
பேரீச்சம் தாயே மரத்தடியில்
பேரீச்சம் அங்கம்மா மரத்தடியில்
போட்டமர்ந்தாள் தாயே ஆசனத்தை
ஆசனம் அங்கம்மா புலித்தோலாம்
அன்றமர்ந்த தாயே மான்தோலாம்
மான்தோலை அங்கம்மா தரித்தவளே
மாயாண்டி தாயே பத்தினியே
குட்டிநல்ல அங்கம்மா புலித்தோலாம்
கொடிவேங்கை தாயே ஆசனமாம
புலித்தோலை அங்கம்மா தரித்தவளே
புனலணிந்தோன் தாயே பத்தினியே
கஞ்சுளி தாயே தரித்தவளே
வர்த்த சிவன் அங்கம்மா பத்தினியே
சித்தாங்கம் அங்கம்மா தரித்தவளே
சிவனுருட தாயே பைங்கொடியே

மாயிமருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] மாயாண்டி தேவியம்மா ஆனந்தமே
மாங்காளி அங்க முத்து ஆனந்தமே
பேயாண்டி தேவியம்மா ஆனந்தமே
பேர்போன அங்கமுத்து ஆனந்தமே
காடு புகையுதம்மாள ஆனந்தமே
காணுறு நின்றெறியும் ஆனந்தமே
சுடலை புகையுதம்மாள் ஆனந்தமே
சுடுகாடு நின்றெறியும் ஆனந்தமே
நடுசுடலை தில்லைவனம் ஆனந்தமே
தில்லை வனக்குயிலே ஆனந்தமே
திருநடன சுந்தரியே ஆனந்தமே
ஜெக ஜால மோகினியே ஆனந்தமே
ஜெகததிந்திராணியம்மா ஆனந்தமே
வேகா சுடலையிலே ஆனந்தமே
சாகாவரம் தந்தவளே ஆனந்தமே
சித்தாங்கம் கட்டியம்மா ஆனந்தமே
சத்தாங்கம் ஆடிவர ஆனந்தமே
அக்குமணி பூண்டவளே ஆனந்தமே
அஙகாள வல்லியம்மா ஆனந்தமே
கொக்கிறகு பூண்டவளே ஆனந்தமே
கொளளிமலை அங்கமுத்து ஆனந்தமே

அய்யேருனந்தமாட என்ற மெட்டு

[பூ] ஆதியில் அங்கமுத்து நடிக்க தேவ
ஆசாய முனிவர்கள வேதங்கள் படிக்க
ஆதி மூலமாயன் மத்தளமடிக்க—தெய்வ
ஆனநிதமலையனுர் வாழ் அங்கு தாயே (ஆ)
சோதி சுடரொளி நீலி—கண்ட
சோமசுந்திரனுதர் மகிழ்ந்திடும் காளி
சோதிப்பதேனம்மா தாயே—நீர்
சொபதமாய் வரம் தந்துகார் நீயே (ஆ)
ஏனம்மா என்மீது ஜாலம்—இது
ஏற்காத வரம் தந்து காரம்மா நாளும்

ஏந்தி கபாலமும் சூலம்—இப்போ
ஏழையை காத்திடுவாயே இனிமேலும் (ஆ)

சடை தனில் லிங்கம் பதியாட—பொல்லா
சர்ப்பமது தோளினில் பட மெடுத்தாட
சதுர் முகன் மண்டை கரமாட—தேவ
சர்வலோக எண்டிசை சராசரமாட (ஆ)

காஞ்சி காமாக்ஷி நீயாக—மகன்
கார்த்தவராயர்க்காய்கம் பாவில் ஏக
தவம்புரி மரகத மீனுள்
தக்ஷிணுராயணி நீதான் அங்கம்மாள் (ஆ)

[ப] ஆதயில அஙகமுத்து

ஆதியில் அங்கமுத்து ட என்ற மெட்டு

[பூ] தந்தான தின சூல மேந்தினுள் அங்கமுத்து
அண்ட பிண்டமான தேவதா மலையனூராள
அகிலலோகமான தேவதா அங்காள வல்லி
ஜோது நீதி ஆதி பர்வதா மலையனூராள்
சொக்கர் முத்தம் கொஞ்சும் நீலியே அங்காளவல்லி
சுடலைகரையில் பூசைகொண்டவளாம் மலையனூராள்
சுந்தரிமிகு அந்தரியாளே அங்காளவல்லி
ஏனம்மா என் மீதில் கோபமா மலையனூராள்
ஏற்குமோ யிப்பாப தாபமோ அங்காளவலலி
பிரமமாராக்ஷதர் எதிரிவாடவே மலையனூராள்
பிச்சாண்டி ரூப மானவள அங்காளவல்லி
மூன்னூரு சிஙகம் தன்னிலே மலையனூராள்
மூதல சிங்கம் முதுகிலேறினுல் அஙகாளவல்லி
ஆங்கார சிங்கமேறியே மலையனூராள்
ஆடி சுடலே தேடிவாராளே அங்காளவலலி
ஓங்கார சொரூபியானவள் மலையனூராள்
ரீங்கார சப்தமான வளாம் அங்காளவல்லி
மாணடபிணங்கள் மாலைபூண்டாளாம் மலையனூராள
மார்பதககம் எலுமபு பூணடாளாம் அங்காளவலவி
வாயில் பிணத்தை கவ்வி கொண்டாளாம் மலையனூராள்
வாதாடும பேய்கள் சூழ்ந்தவளாம் அங்காளவல்லி

மலையனூரில் வாழ்ந்த நீலியே மலையனூராள்
மச்சரதம் ஊர்ந்த காளியே அங்காளவல்லி (தந்)

இரட்டைசீர்

[பூ] ஏரியென்று என் அம்மா ஏரியம்மா
[ப] ஏரியென்று என் அம்மா ஏரியம்மா
இருகரையும் தாயே பொன்னேரி
தண்ணீர் வந்தால் தாயே நிறம்பாது
தாழனூரை என் அம்மா ஏரிக்கரை
மழை பொழிந்தால தாயே நிறம்பாது
மலையனூரில தாயே ஏரிகரை

நையாண்டி

[பூ] ஏரிகரை யோரத்திலே ஈசான்ய மூலையிலே
பேரீச்சம்மரத்தடியில போட்டமர்ந்தாள் ஆசனத்தை
ஆசனம்புலித்தோலாம் அன்றமர்ந்தமானதோலாம்
குட்டிப் புலித்தோலாம் கொடிவேங்கை ஆசனமாம்
[ப] ஆமாம், ஆமாம்

ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] ஒத்தாங்கக் காரியம்மா ஆனந்தமே
சிவனரிட பைங்கிளியே ஆனந்தமே
முக்கண்ணுடையவளே ஆனந்தமே
மூஷிகனை யீன்றவளே ஆனந்தமே
தில்லை சிதம்பரத்தில் ஆனந்தமே
திருநடனம செய்தவளே ஆனந்தமே
மகுட சங்காரியம்மா ஆனந்தமே
மாங்காளி துர்க்கியம்மா ஆனந்தமே
[பூ] தத்தான தின தானதானனு தந்தான தான
தந்தான தின சூலம் ஏந்தினள அங்காளவல்லி
மட்டடங்கா சிங்கமேறிய அங்காளவல்லி
மாங்காளி பழனங்கொண்டாளாம் தந்தான தான
மாண்டார் எலும்பை பூண்டவள் அங்காளவல்லி
மலையனூரில் வாழ்ந்துகொண்டவள் தந்தான தான
காடுமேடு சுடலை ஆடினள் அங்காளவல்லி
கருத்தசடையைவிரித்துகொண்டவள் தந்தான தான

## ஆனந்தக் களிப்பு

[பூ] தெய்வப்புரத்தாசே அங்கம்மா அங்கம்மா
தென்னடை மலையனூரில் தேவர் புடைசூழ
கைப்பிரப்பு சித்தாங்க சூலம் அங்கம்மா
பக்கத்தில் வேல முருகர் பாவாடையுடனே (அ)
உந்தியில் உதித்தோன் சென்னி கிள்ளி
கந்தியில் வூர்ந்தோன் கபாலமாயாக்கி
மந்திரப் பேய்களை அதட்டி அங்கம்மாள்
மாயாண்டி அய்யரும் தலைகுனிந்தாட (அ)

## விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை :—

மாயாண்டி கூடவல்லோ தாயே தாயே
மணி விளக்கில் வாங்களம்மா
பாவாடை கூடவல்லோ என் தாயே அங்கம்மா
பதிவிளக்கில் வாங்களம்மா
ஆரார் வரும்வேளை என் தாயே தாயே
ஆயிபுட காவலிலே
[ப] ஆரார் வரும்வேளை

## நடை வேறு சந்தம்

[பூ] அத்தாளே வந்தமரும் அங்காள பார்வதியே
வேர்த்தாளோ வடிவழகி வேறுபடா மாமுகமோ
துலுக்கானமாரிமுத்தே துஷ்டருக்குபெண்பிறந்தால்
துடுக்கர் மடையரெல்லாம துரும்பாக செய்தசக்தி
பாரளந்தமாரிமுத்தாம் பக்ஷம்வைத்துகார்க்கனுமே
ஊர்க்கார்க்கும் மாரிமுத்தே உத்தமியே வாடியம்மா
சமைந்தாய் சமையபுரம் சாதித்தாள் கண்ணபுரம்
கண்ணபுரி மாரிமுத்தே கட்டழகி வாடியம்மா
மலையாள தேசமெல்லாம் விளையாட பெண் பிறந்தாள்
வேணது உன் புகழு வெற்றிக்கொடி மாமுகமே
வாடியம்மா இந்தமுகம் வடிவா வடிவழகி
தேடியே நானழைக்க தேசாந்த மாரிமுத்தே
கோடிநமஸ்காரம்மா கும்பிட்டேன வந்தமரு

குழந்தையிங்கு கேட்கிறது கோவில்முன்கேட்கலேயா
எந்த முகமானாலும் ஏழைமுகம் வந்தமரு
[ப] எந்த முகமானாலும்

மலேயனூரில் அங்காள பரமேஸ்வரி பேரில் பாட்டு

[பூ] மலேயனூரில் குடியிருக்கும் தாயே
குடியிருக்கும்
[ப] ஆமாம், ஆமாம்.
[பூ] மாயிஉமை ஆனவளே தாயே
ஆனவளே
[ப] தேவதா, தேவதா.
[பூ] செங்கையினில் கற்பறையாம் தாயே
கற்பறையாம்
[ப] ஆமாம், ஆமாம்.
[பூ] சிவனாரும் ஒரு புறமும் தாயே
ஒரு புறமும்
[ப] ஆமாம், ஆமாம்.
[பூ] வீரபத்ரர் ஒரு புறமும் தாயே
ஒரு புறமும்
[ப] ஆமாம், ஆமாம்.
[பூ] ஐங்கரரும் ஒரு புறமாம் தாயே
ஒரு புறமாம்
[ப] ஆமாம், ஆமாம்.
[பூ] கரத்தில் கபாலமுடன் தாயே
கபாலமுடன்
[ப] தேவதா, தேவதா.

வேறுநடை பாட்டு

[பூ] அக்கினி கபாலமுடன் ஆனந்தமே தாயே ஆனந்தமே
அங்காள ரூபமானாள் ஆனந்தமே தாயே ஆனந்தமே
பம்பை உடுக்கையுடன் ஆனந்தமே தாயே ஆனந்தமே
பார்முழுதும்முரசுகொண்டார் ஆனந்தமேதாயே ஆனந்தமே
சூலம் ஒருகையில் ஆனந்தமே தாயே ஆனந்தமே
சுத்தமுடன் கோலம்கொண்டார் ஆனந்தமே தாயே ஆனந்தமே

ஷ வர்ண மெட்டு

[பூ] கலியுகத்துக்கு தெய்வமானுள் தாயே
தெய்வமானுள்
[ப] தேவதா தேவதா
[பூ] காந்தாரி ரூபங்கொண்டாள் தாயே
ரூபங்கொண்டாள்
[ப] ஆமாம் ஆமாம்.
[பூ] பொல்லாத தெய்வமானுள் தாயே
தெய்வமானுள்
[ப] தேவதா தேவதா
[பூ] அங்காள கோலம் பூண்டாள் தாயே
கோலம் பூண்டாள்
[ப] ஆமாம் ஆமாம்.

வேறுநடை பாட்டு

[பூ]பழிக்குப்பழிகொடுப்பாள் ஆனந்தமேதாயேஆனந்தமே
பாப்பாத்திஎங்களம்மா ஆனந்தமேதாயேஆனந்தமே
எங்கும்பரவி நின்றுள் ஆனந்தமேதாயேஆனந்தமே
மங்குமருளியம்மா ஆனந்தமேதாயேஆனந்தமே
துஷ்டரைக்கருவருப்பாள் ஆனந்தமே தாயே ஆனந்தமே
இஷ்டங்கொண்டு
காத்திடுவாள் ஆனந்தமேதாயேஆனந்தமே

வர்ண மெட்டு

[பூ] நல்லவர்க்கு நல்லதெய்வம் தாயே
நல்லதெய்வம
[ப] ஆமாம் ஆமாம்.
[பூ] கோபம் கொண்டாள் தாளமாட்டாள் தாயே
தாளமாட்டாள்
[ப] தேவதா தேவதா.
[பூ] கோபாலன் தங்கையிவள் தாயே
தங்கையிவள்
[ப] ஆமாம் ஆமாம்.

[பூ] கோரினர்க்கு வரமளிப்பாள் தாயே
வரமளிப்பாள்

[ப] தேவதா தேவதா

[பூ] குற்றமில்லா எங்கள் தெய்வம் தாயே
எங்கள் தெய்வம

[ப] ஆமாம் ஆமாம்

[பூ] இஷ்டங்கொண்டாள் காத்திடுவாள் தாயே
காத்திடுவாள்

[ப] தேவதா தேவதா

வேறுநடை பாட்டு

[பூ] எல்லாரும் தான்படிக்க ஆனந்தமே தாயே
ஆனந்தமே

கள்ளமில்லா தேவன் கவி ஆனந்தமே தாயே
ஆனந்தமே

குற்றம் குறையிருந்தால் ஆனந்தமே தாயே
ஆனந்தமே

குழந்தையை காக்கவேணும் ஆனந்தமே தாயே
ஆனந்தமே

மதுரைவீரசுவாமி உற்பத்தி
செந்தமிழ் உலகிலில் என்ற மெட்டு

முத்தமிழ் தென்மதுரை மீனாக்ஷி ஆலயத்தில்
முன்மேடை காவல் செய்பவா முத்துவீரய்யா
முன்மேடை காவல் செய்பவா

பார்புகழ் காசியை ஆண்டிடும் மன்னனும்
பண்ணு தவத்தினால் பாலனாய்த் தோன்றியே

வந்த மஹானுபாவனே—வனத்தில் விட
வருந்தியழுத லோலனே (மு)

கம்பைமானகர் வாழும் காலஞ்சென்ற தேமாயி
காட்டினில் கண்டெடுத்திட—வீரய்யனென
கனத்தபெயர் தரித்திட

கடுஞ்சினமாகவே காட்டினிலேகியே
காடி புலி சிங்கம் கதறயடித்தவா

காளிவரங்கள் பெற்றவா—காவல் முனியை
கழுத்தை யறுத்துக் கொன்றவா (மு)

பொழலிமாநகராளும் பொம்மண நாய்க்கன் மகள்
பொம்மியை சிறைகொண்டவா—பொழுது மறைய
போர்க்களம் வெற்றிக் கொண்டவா

கன்னிகை பொம்மியும் கண்டுமே தந்தையே
கலங்கியழுதுமே கருமம் முடித்திட

சென்று திருச்சிதேடியே—வேந்தனிடத்தில்
சேவகம் செய்தாய் நாடியே (மு)

மன்னன் விஜயரங்கம் மனதுகோணாமல் நீயும்
மாளாத கள்ளர் படையை—மடியவைத்து
மன்னர்குறைத்தீர் சேதியை

கட்டாணிமுத்தரும் கன்னிகை பொம்மியும்
கம்பைநாய புரவியும் கலக்கமிலாமலே

கலந்து சுகித்து வாழ்ந்திட—திருமலையன்
கண்டு லிகிகமெழுதிட (மு)

கனமபெற்ற ரகுநாதா மன்னரே இப்பொழுது
கணக்கற்ற கள்ளர்கூட்டமே—கொடுந்துயரம்
கணடு பிடிக்க வேணுமே

இந்த லிகிதம் கண்டதும் யிக்ஷணம்
இணையில்லாமலே யிருக்கும் காவலர்

ஆணிமுத் தய்யனை நீறும் அனுப்பிவைத்தால்
அனைவர் குறைகளும் தீரும் (மு)

வருத்தி யெழுதும் சேதி வாசித்து விஜயரங்கம்
வாரும் வீரய்யபாண்டியா—மருதைநகர்
காரும் வீரய்ய பாண்டியா

பலவித படையுடன் பாவை பொம்மியும்
பல்லக்கிலேறியே பரிமீதில் வந்து

பாண்டியன் வந்திறங்கவே—வைகை நதியில்
பலவித சப்தம் முழங்கவே (மு)
கண்டான் திருமலையன் கனத்த முழக்கமதை
கலங்கி மனது வேர்த்துமே—அமைச்சனையும்
காஷாயம் தரித்து கண்டுமே

விரைந்து க்ஷணத்தில் வீரய்ய னென்றுமே
விபரவாய் சேதி விரிட்டுரைத்திட

பலவித ஆடம்பாரமாய் பாராளும் மன்னன்
பல்லக்கிலேற்றி வேகமாய் (மு)
அய்யனைக் கொண்டு வந்து அதிபதியாக வல்லோ
அமர்த்தியே வாழும் நாளையில்—அநேகம் கள்ளர்
அரண்பதியே சேர்ந்தார் வாளினுல்

அருகினில் வெளளையும் ஆலம் ஏந்திட
அழகு வீரய்யனும் அம்மையைக் கண்டிட

ஆவலாய் சிறையெடுத்திட—ஆட்கள் கண்டு
ஆண்டவன் கால் கை வாங்கிட (மு)
மீனும்பிகைவரத்தால் மனந்தளர்ந்துமன்னன்வருந்த
மீண்டும் வளர்ந்து நீருமே—மீனுக்ஷி கோவில்
மின்மேடை கார்த்தார் பாருமே

அண்டரும் தேவரும் அனைவர் தொழுதிடும்
அம்மை மீனும்பாள் அரும்பலி ஸ்தம்பம்

அன்பாய் கார்த்திட்டாய் நீருமே—சயய சபை
அ-கனக சபைகயக் காருமே (மு)

அன்னவர் புத்திரராம் அ-க-ஷண்முக நாயகர்
அவர் மாணவன் சத்திவேலனும்—அப்பன் மீதினில்
அருந் தமிழோதினேன் நானும்

ஆணிமுத்தையன் அருங்கவி பாடிட
அதில் பிழையாகிலும் ஆதரித்துமே

முற்றுமுணர்ந்து நீருமே—சமய சபை
முழுதும் விளங்கபாருமே (மு)

ரேணுகா பரமேஸ்வரி உற்பத்தி

[பூ] கைபாண்டி
ஆதியும பவனீன்ற அருதலே வுப்பைதன்னை
அந்தவூர் வாழுகின்ற அன்பான வண்ணார்கள
கண்டெடுத்துதான் வளர்த்து கலகமதுதான் சேர்ந்து
வர்மராஜன் தன்னிடத்தில் வந்து கொடுத்தார்கள்
அன்று முதல் ரேணுகையாய் அன்பாய் வளர்ந்து வாருள்

வசனம்

ஆதிவோர் நாளையில்-மாயனும், வேதனும், சண்டை யிட்டு, அதனல் சாபம் சேர்ந்து கலியுகத்தில் வந்து பிரம்பனும் சரஸ்வதியும் ஏழுபிள்ளை யீன்று பிரம்ம லோகம் சேர்ந்த பிறகு அதிலொரு குழந்தை வுப் பையை அரசன் எந்தனிதமாக வளர்ப்பாளென்ருள்,

பூசாரியின் சமய நடை

[பூ] ரேணுகை என்று சொல்லி மன்னன்
பூரணமாய் பேருமிட்டு அங்கே
மார்மீதில் ஏணை கட்டி மன்னன்
மடிமீதல் நடை பழக்கி அங்கே
தோள்மீதில் ஏணைக்கட்டி மன்னன்
துடைமீதில் நடைபழக்கி அங்கே

நாளொரு மேனியாக மன்னன்
நாதாங்கியை தான் வளர்த்து வாருன்
இப்படிக்கு தான் வளர்ந்து அம்மன்
இருக்கு மந்த நாளையிலே அங்கே
பன்னிரண்டு பிராயமதிலம்மன்
பருவத்தை தானடைந்தாள் அங்கே
புஷ்பவதி யாகியல்லோ அம்மன்
பூவபூசை செய்யலுற்ருள் அங்கே

குறவஞ்சி மெட்டு

[பூ] இப்படி இருக்கையிலே இன்பமுடன் தானும்-அங்
இன்பமுடன் தானும் இன்பமுள்ள நாரதரும் [கே
இறங்கிவந்து புவியில் 1

பிருகுரிஷி மைந்தனை ஜெமதக்கினி தபசில் அங்கே
ஜெமதக்கினி தபசில் பிரியமுடன் வந்து நின்று
புகலுகிருர் அப்போ 2

வசனம்

மஹா விஷ்ணுவுக்கு பத்துதரம் ஜெனனமாகும் படியாய் சபித்த பிருகு ரிஷியின் மைந்தனை, ஜெமதக்கினி முனிவர் முன்வந்து ஏதுரைப்பாரென்ருல்,

கும்மி

[நா] ஆனல் கேளும் ஜெமதரிஷி உனக்
கானமங்கையை கண்டு வந்தேன்
உன்மனம் போலாக தானடப்பாள் அந்த
உத்தமியை மாலேயிட்டு வாரும்

[ஜெ] என்றுவுரைத்திட நாரதரும் அப்போ
எதிர்நோக்கி முன்னே நமஸ்கரித்து
என்பால் கருணை கொண்டு வந்ததால்
எடுத்துரைப்பேன் பதில் கூறுமய்யா

ஓட்டம் பெருநடையாய் என்ற மெட்டு

அய்யா ஓய்நாரதரே அன்பாய் வுரைக்கிறேன் கேள்
அவள் பிறப்பு வளர்ப்புகளை அறிய வுரைத்தீரானல்
உன்மனம்போலாக உகந்துமணம் கொண்டிடுவேன்
என்று உரைத்தாராம் எழிலான நாரதர் முன்
அப்போது நாரதரும் அறையலுற்ருர் மாமுனிக்கு
அம்மனுட தன் சமர்த்தை அன்பாய் வுரைக்கலுற்ருர்.

நொண்டிச்சிந்து

ஆதி வைகுந்த மதில்-அந்த அய்யனை கஞ்சனுக் குமா-மாயனுக்கும்-அண்ட மதிரும்படியாய்-கடும் போர் நடந்து அண்ணுமலையார் முன்னெழுந்து வேதனுக்கு சாபம் தந்து-அப்போ பிரம்மனும் சரஸ்வதியும்-புவி மீதில் மறு ஜென்மம் தானெடுத்து-புவிமிசை வழு பிள்ளை யீன்றெடுத்தார் மண்மீதில்-அதிலொரு பெண் குழந்தை வர்மம ராஜன்-மனை தனில் தான் வளர்ந்து வரலுற்ருள்-அவளை விவாகம் செய்காள்-அவனியில் கீர்த்தியுண்டு யுகம் மறையும் வரை இது சேதி நானு ரைத்தேன்-இனிமேல் நடக்கும்-காரியத்தை முடியு மையா-என்றுரைத்தார் நாரதரும்

(தினமும் தினதினனும்)

பூசாரியின் சமய நடை

அப்போது ஜெமதக்கினி அன்புடனே தானெழுந்து
நாரதாமா முனிக்கு நமஸ்காரம் செய்து நின்று
அப்படியே நல்லதென்று அரசனைக் காண்பதற்கு
இருவரும் வொன்ருக இன்பமாய் வாருர்கள
ஊத்தங்காட்டு மன்னனிடம் உத்தமர்கள் வாருர்கள்
அரசன் மனை தேடிவந்து அன்பாக நின்ருர்கள்
காவலரை தானழைத்து காணும்படி உத்தரித்து

அரசன் வரவைகண்டு அரண்மனைக்குள் புகுந்தார்
அப்போது அரசனவர் அமர்த்தினர் இருவரையும்
இருவரையும் தானமர்த்தி இருந்து நமஸ்காரமிட்டு
அடிமையை தேடிவந்த அருஞ்சேதி யுரையுமென்று
உங்கள்பதம் காணுதற்கு உத்தமனே புண்ணியம் செய்தேன்
தேடிவந்த காரியத்தை தெரியவுரையு மென்றான்
அப்போது நாரதரும் அரசனுக் கெடுத்துரைப்பார்

வசனம்

அய்யா வேந்தனே! பிருகுரிஷியின் மைந்தனான ஜெமதக்கினி மாமுனியும் இவர்தான் தவத்தில் மிகுந்தவர் இவருக்கு உன் புத்திரியை மணம் செய்ய வேண்டி கேட்க நாடி வந்தேன் என்று உரைக்க,

சமய நடை பாட்டு

அப்போது வேந்தனுந்தான் அங்கம் மிககுளிர்ந்து
உங்கள்மனம் போலாக உத்தமியை தாரேனென்று
புரோகிதரை தானழைத்து புத்திரிக்கு நாள்பார்த்து
சித்திரை மாதத்திலே சிறப்பாக கலியாணம்
செய்து முடித்தாரே செழிப்பாக இருவருக்கு
அனைவர்கள் தானறிய அன்பாய் முடித்தாரே
ஐந்து நாள் கலியாணம் அழகாய் முடித்த பின்பு
அவரவர் தன்பதிக்கு அனைவர்களும் சேர்ந்தார்கள்
இப்படியாக வல்லோ இருக்குமந்த நாளையிலே
வேந்தனை நோக்கியல்லோ வெறுப்பாக ஜெமதரிஷி
அய்யா ஓய் வேந்தனே அரண்மனை கூடாதய்யா
தனி விடுதி நந்தவனம் தருகவேணும் எங்களுக்கு
இனி இருக்க மாட்டோமென்று இயம்பினர் ஜெமதரிஷி
அப்போது அரசனுந்தான் அவர் மனம் கோணாமல்
தனி விடுதி நந்தவனம் தந்தானும் இருவருக்கும்

அப்போது ஜெமதரிஷி அன்பான ரேணுகையும்
ஆளனும் தேவியுமாய் ஆண்டு வாரார் அவ்விடத்தில்
இப்படியாக வல்லோ இருக்குமந்த நாளையில்
நான்கு பிள்ளை யீன்றெடுத்தார் நலமாக இருவர்களும்
ஒருவன்பேர் அனுவனுமே ஒருவன்பேர் சனுசனுமே
மற்றொருவன் விஸ்வாசு மண்டலத்தில் யீன்றெடுத்து
நான்காவது மகன் தான் நலமான பரசுராமன்
இப்படிக்கு நான்கு பிள்ளை யீன்றெடுத்து வாழ்ந்துவர
ஆளவந்த ஜெமதக்கினி அரன்பூசை செய்வதற்கு
மனையாளை தானழைத்து மன்னவரேதுரைப்பார்
கங்கை கொண்டு வரும்படியாய் கட்டளைகள் தானுமிட்டார்
இப்படியாக அம்மன் இன்பமாக கொண்டுவர
ஓர்நாள் தினத்திலேதான் ஒயிலமாய் கெந்தர்வனும்
ஆகாயம் பறந்துவர அவனழகை கண்டாளாம்
அழகை நினைத்ததினால் அம்மையந்த ரேணுகைக்கு
கங்கையது கூடவில்லை கன்னியந்த ரேணுகைக்கு
கலக்கமது கொண்டாளாம் கணவரை நினைத்தாளாம்
இந்த குற்றம் செய்தேனே ஏது சாப மீய்வாரோ
ஏது மறியேனென்று ஏங்கி புலம்புகையில்
அப்பொழுது ஜெமதக்கினி அரிவையை காணோமென்று
அஞ்சனம் போட்டுமல்லோ ஆராய்ந்து சேதிகளை
பரசு நல்ல ராமனையும் பக்குவமாய் தானழைத்து
உன் தாயார் ரேணுகையும் பதிகுலைந்தாள் கெந்தர்வனுடி
ஆதலால் உன் தாயை அறுத்தெரிந்துவாருமென்றார்
பட்டாவை தானேந்தி பாலனான பரசுராமன்
தாயாரைக் கொள்வதற்கு தானோடி வாரானங்கே
கண்டாள் ரேணுகையும் காளை வருகிறதை
ஓட்டம் பெரு நடையாய் ஓடிவந்தாள் சேரியிலே
அபயக்குரல் கேட்டாராம் அன்பான சக்கிலிமார்
அஞ்சாதே தாயேயென்று அம்மனை ஒளியவைத்தார்

அப்போது பரசுராமன் அதிக கோபம் கொண்டுமல்லோ
சக்கிலி குடிசைகண்டு சங்கரித்தான் அனைவரையும்
தாயாரந்த ரேணுகையை தானறுத்தானே பரசுராமனே
தலையை அறுத்தானும் தவம் பெற்ற பரசுராமன்
கத்தியை தானலம்பி காளையன் ஓடிவந்து
தகப்பனிடம் சேதி சொல்லி தக்ஷணமே கெண்டு விட்டானே
மறுநாள் காலையிலே மாராட்டம் கொண்டானும்
பிரம்மத்தி கொண்டானும் பிள்ளையந்த பரசுராமன்
அப்பொழுது கண்டாராம் அப்பனந்த ஜெமதரிஷி
என்ன வரம் வேண்டுமென்று ஏறிட்டு கேட்டாராம்
அப்போது பரசுராமன் அன்னையை தானெழுப்பி
தருக வரம் கேட்டானும் தகப்பனையும் பரசுராமன்
அப்படியே தந்தேனென்று அன்பாய் விபூதிதந்தார்
விபூதியை கையெடுத்து விமலனந்த பரசுராமன்
மாறுடலாய் தாயாரை மகனும் தான்சேர்ந்து
அனைவர் மீதில் தூவினாராம் அப்பனுட வெங்கீரை
எப்போதும் போலாக எழுந்தார் அனைவர்களும்
தாயாரை தானடத்தி தகப்பனிடம் சேர்த்தாராம்
இப்படிக்கு இருக்கையிலே இனிநடக்கும் விபரமதை
உரைத்திடுவேனே சபைமீதில் உத்தமியாள் தன் சமர்த்ததை
தாயார் விளையாட்டை தவமழகன் நானுரைப்பேன்

வசனம்

ஓர்நாள் தினத்தில் ஜெமதக்கினி மாமுனிவர் தன் மனையாளைப் பார்த்து. உடல்மாறுபாடாக இருப்பதினால், இனி என் அண்டையில் கூடாதென்றுரைக்க, அப்போது ரேணுகை கேட்கலுற்றாள்.

ஆங்கார ரூபமானாள் என்ற மெட்டு

நான் பிழைக்கும் வகையதனை மன்னா
நாயகரே யுரையு மென்றாள் அங்கே
அப்பொழுது ஜெமதக்கினி கண்டு
அறுவைக்கு ஏதுரைப்பார் அங்கே

ஏழுமுத்து வோதி தாரேன் பெண்ணே
ஏகி நீயும் பிழைத்திடுவாய் என்றார்
மித்தினிட சோதனையாய் சுவாமி
உத்தமியாள் நானறிய வென்றால்
அப்பொழுது ஜெமதக்கினி அங்கே
எடுத்ததறியும எந்தன் மீதில் என்றார்
அப்படியே தூவினளாம் அம்மன்
அதிக பாதை கொண்டாராம் அய்யர்
உந்தன் முத்து தாளவில்லே பெண்ணே
உத்தமியே இறக்குமென்றார் அங்கே
கேட்டாளாம் ஆளன் சொல்லை அம்மன்
கிருபையுடன் ஏதுரைப்பாள் அங்கே
நான் கேட்கும் வரம் கொடுத்தாள் நாதா
நாயகியாள் இறக்கிடுவேன் என்றாள்
தக்ஷணமே என்ன வரம் வேணும்
தாரேனடி என்றுரைத்தார் அங்கே
நால்வர் லோகம் சென்றல்லவா நாதா
நான் முத்தளக்க வேணும் என்றாள்
அப்படியே தந்தேனடி பெண்ணே
அளித்த முத்தை நீயிறக்கும் என்றார்
அந்த முத்தை தானிறக்கி அம்மன்
அரனிடம் வந்து நின்றாள் அங்கே
ஈசருக்கு முத்தை தூவி நின்று
மிருக்கையிலே கண்டாராம் சிவனும்
பாதையது தாளவில்லை என்று
பகரலுற்றார் அப்பொழுது அரனும்
நான் கேட்கும் வரமளித்தால் சுவாமி
நாயகியாள் இறக்கிடுவேன் என்றாள்

### நையாண்டி

அப்பொழுது ரேணுகையும்    அரனரைக் கேட்கலுற்றாள்
பாற்பசுவும் சூலமதை    பரமரே தாருமென்றாள்
அப்படியே தந்தாரும்    அரனும் அம்மையர்க்கு
முத்திரைக் கொண்டல்லவா    வைகுந்தம் தேடிவாராள்
மாயனுக்கு முத்தளந்து    சங்கு சக்கரம் பெற்றாளாம்
பிரமனுக்கு முத்தளந்து    எதுரைப்பாள் அம்மனும் தான்
நான் அளக்கும் முத்தினர்க்கு    நாள் முடிவு ஆனாலுமே
என்பழி நேராமல்    எழுதிவைப்பாய் மானிடர்க்கு
நாலாயிரத்து நானூற்று    நாற்பத்தெட்டு வியாதி தனில
மாரியென்று வியாதிதனை    மாற்றி எழுதுமென்று
உத்திரவு பெற்றுக்கொண்டு    உத்தமியாள் முத்திறக்கி
எமனுடைய சோதனையில்    எடுத்தெறிந்தாள் முத்துதனை
எமனும் பொறுக்காமல்    எருமாடு காவுதந்தான்
பாசக்கயிர் கொடுத்தான்    பராபரியாள் மாரியர்க்கு
இத்தனையும் பெற்றுமல்லோ    இறங்கினளாம் பூலோகம்

### விளக்கின் வர்ணிப்பு

[பூ] வசன நடை :—

ஆரணியாம் பாளையத்தில்
அமர்ந்தாளாம் ஆலயமாய்
அண்ணன்மார்கள் புடை சூழ
அம்மை கொலுவானாள்
மக்களையும் காப்பதற்கு
மாதா கொலுவானாள்
அறியாதோன் பாடுகின்றேன்
அகலாமல் காருமம்மாள்
போற்றி நல்ல போற்றியம்மா
பொன்னடிக்கு நான் போற்றி.

## 1. 2. முக்கிய கவனிப்பு

பூசாரிகள் நம்பர் குறித்த பிரகாரம் பாடி விட்டதும், பம்பைக்காரர்கள் உடனே ஒவ்வொரு அடிக்கும் தந்தாநத்தின தானதானனே என்று பாடினல், கேட்போருக்கு அலங்காரமாய் இருக்கும். கவனிக்கவும்.

### வேப்புலி அம்மன் பேரில்

1. தந்தாநத்தின தானதானனே
தந்தான தான
தான தந்தின தான தானனே
தந்தான தான.

2 ஒங்காரமாய் தானமர்ந்தாளே வேப்புலி தாயார்
ரீங்காரமாய் தானுகந்தாளே (த)
வேங்கை புலி மீது கொண்டாளே ஈஸ்வரியாள்
வேணவரம் தானளிப்பாளே (த)
திரிகாளி அம்மனுடனே பராசத்தி
துரிதமுடன் தானுகந்தாளே (த)
பாவாடை வீர முத்தாமே எழுவருமே
படை மன்னர் அண்ணருடனே (த)
பூசை முகம் கொலுவில் வந்தாளே வேப்புலியும்
ஆசை கொண்டோர் நேசம் கொள்வாளே (த)
எல்லை காவல் கொண்ட சத்தியாம் எனது தாயார்
சல்லை எல்லாய் போக்கிடுவாளாம் (த)
கள்ள மில்லா தேவன் கவியாள் கலியுகத்தில்
கண் கண்ட தெய்வ மானுளே (த)
[ப] தந்தாநத்தின தானதானனே.

ஐய்யே ருனந்தமாட என்ற மெட்டு

ஐய்யே ருனந்தமாட என
தம்மாளும் பூங்காவனத்தாளுமாட
மல்லிகை பம்பையும் தட்ட ஆபி
மனபந்தல் வாசலிலே நடனங் கொண்டாட (ஐ)

வேம்புலி வுமையவளாட நல்ல
வீர முத்து பாவாட ருயரும் கூட
காத்த முத்து அண்ணருமாட மாது
கன்னியம்மாள் பூவாடை களித்துக் கொண்டாட (ஐ)

சண்டாளர் துஷ்டர்கள் வாட வேம்புலி
சதுரங்கம்மாடி வாருள் திருகாளியோட
ஒங்கார ரீங்காரம் கொள்வாள் தாயார்
ஆங்காரம் கொண்டோரை அலரிஓட (ஐ)

எல்லேக்கு எல்லேயெல்லாம் நின்ருள் சத்தி
ஏகாந்த ரூபமாய் எங்கு விளேயாட
பொங்கும் பூசை கொள்ளவே தாயார் எல்லே
பங்கம் பழி இல்லாமல் கார்த்திடுவாளம்மன் (ஐ)

வருடா வருடங்கள் தோரும் பூசை
வாங்குவாள் யாவரும் களித்துக் கொண்டாட
எங்கும் குல தெய்வமானுள் தேவி
எல்லோரும் கொண்டாட தேவன் கவிபாட (ஐ)

[பூ] வசன நடை:—

வேம்புலி தாயாரே எழுந்தாயா தீபமதில்
வேங்கை புலி விட்டு மெலல

அண்ணமார் சேனேயுடன் என் தாயே
அடியார்கள் முன்பாக

பூசையை கண்டதுமே வேம்புலி
பொங்குமம்மா பூ விளக்கில்

நாசம்போல் சீரியல்லோ தாயாரே
நடனம கொள்ளும் வேளை யிங்கே
எல்லோரும் தானறிய மாதாவே நீ
எழுந்தாயா தீபமதில்

[ப] எல்லோரும் தானறிய

[பூ] தந்தானத்தின தானதானனே தந்தானதான
தானதந்தின தானதானனே தந்தானதான
அலரிமலரி கிளிகள பறக்குதே சோலைக்குள்ளே
ஆத்தாளுமே புறப்பட்டாளாமே தனதந்தினதின தந்தின (த)
பாதசிலம்பு கதரிட வெழுந்தாள் பரமேஸ்வரியும்
பாலன் சொல்லை கேட்டதும்வாருள்
தனதந்தின தினதெந்தின (த)
சடை குலுங்க வேகத்தில் நின்றுள் மாளிகையில்
சீக்கிரமாய் தான உகந்தாளே தனதந்தின தினதெந்தின (த)
ஓங்காரமாய் தானமர்ந்தாளே பதிவிளக்கில்
ரீங்காரமாய் வந்து நின்றுளே தனதந்தின தினதந்தின (த)

[பூ] ஐயே ரூனந்த பாட என
தம்மாளும் பூங்காவனத்தாளுமாட
மல்லிகை பம்பையும் தட்ட ஆபி
மணப்பந்தல் வாசலிலே நடனம் கொண்டாட (ஐ)

ஆதியுட சினுமே ஆட நல்ல
ஆங்கார ஓங்கார சந்தத் தமிழ்பாட
ஓம் ரீம் அவ்வு சவ்வுசாட எங்கள்
உத்தமியும் கேட்டுபிறை உகந்துமே ஆட (ஐ)

காத்தமுத்து பாவாடை யென்னும் இன்னும்
கன்னியம்மாள் பூவாடையும் வந்து விளையாட
கணமுக்து மதுரை துரையாட நல்ல
காமாக்ஷி மீனும்பிகை கண்டு களித்தாட (ஐ)

எல்லையெல்லாம் நின்ற பராசக்தி ஆயி
சல்லை எல்லாம் போக்குவாளே இத்தருணம் சக்தி
கள்ளமில்லா எங்கள் குல ஆதி சுடலை
கானகத்தில் நடனங் கொண்டாளே மிகஜோதி (ஐ)

பழிக்காரி மாரியென்று சொல்லுவார் பொல்லா
பாண்டியனை கொன்றிடவே காளி வேடமானால்
ரத்தபலி ரணவீர காளி ஓம் ஓம்
இத்தலத்தில் பழிவாங்க அமர்ந்தாளே நீலி (ஐ)

பல்லும் பலருமே வேண்ட ஆயி
பாலயத்தி லமர்ந்தாளே வட பத்திர காளி
கொள்ளை கொள்வாள் மாரிமுத்து ஆயி அம்மன்
கோபம கொணடாள் தாள மாட்டாள் சாபமிடுவாளே
[ப] (ஐய்யே) (பாட்டு முடிவு)

குப்மி வர்ண மெட்டு

[பூ] கும்மிடுவாள் அம்மன் கும்மிடுவாள்—நல்ல
கொண்டை குலுங்கவே குபமிடுவாள்
அண்டம் இடியும் மிடியுமின்ன—எங்கள்
ஆத்தாள் குனிந்துமே கும்மிடுவாள் (கு)

கேட்டவர் யாவர் கலித்திடவே—அம்மன்
கேலிக்கையாகவே கும்மிடுவாள்
பார்த்தவர் யாவர் திடுக்கிடவே—இந்த
பைங்கொடியாள் நல்ல கும்மிடுவாள் (கு)

வந்தமனையில் வரம்கொடுப்பாள் பொல்லா
நொந்த பிணிகளை போக்கடிப்பாள்
சிந்தைமகிழ்ந்தமே ஆடலுற்றாள்—இங்கே
சிக்கனமில்லாமல் காத்திடுவாள் (கு)

துஷ்டர்க்கு துஷ்டகுணசூலி—பொல்லா
துரோகிகளை கண்டால் பலசாலி

ஆட்டிபடைத்திடும் எங்கள் ஆயி—சென்னை
ஆரணியில் நின்ற பேமாயி. (கு)

வேறு நடை சந்தம்

[பூ] ஆரணி நல்ல பாளையமாம் தாயே பாளையல்லாம்
ஆததாளஙகு குடியிருப்பாள் அம்மன் குடியிருப்பாள்
ஆராப் பெருமணலாம் அங்கே பெருமணலாம்
அதிகாரி வீற்றிருப்பாள் அம்மன் வீற்றிருப்பாள்
[ப] ஆராப் பெருமணலாம்.

வேறுநடை பாட்டு

[பூ] ஆயிரங் கண்ணுடையாள் ஆனந்தமே
தாயே ஆனந்தமே
பதினாயிரங் கண்ணுடையாள் ஆனந்தமே
தாயே ஆனந்தமே
போட்ட முத்து கொப்பளிக்க ஆனந்தமே
தாயே ஆனந்தமே
பொல்லாத மாரி ஆயி ஆனந்தமே
தாயே ஆனந்தமே

ஷை பாட்டு

நெஞ்சுருகி போகுதம்மா தாயே போகுதம்மா
நாவினிலே தைத்த முள்ளு தாயே தைத்த முள்ளு
மார்பினிலே தைத்த முள்ளு தாயே தைத்த முள்ளு
மார்புருகி போகுதம்மா தாயே போகுதம்மா

வேறுநடை பாட்டு

பத்துபலம் கொண்ட தொரு ஆனந்தமே
தாயே ஆனந்தமே
பாரளந்த முத்தாமே ஆனந்தமே
தாயே ஆனந்தமே

ஷை பாட்டு

தட்டை அபமை மாரிமுத்து தாயே மாரிமுத்து
கொட்டு மெல்ல விஷகாகம் தாயே விஷநாகம்
பயிரமமை மாரி தாயாம் அம்மன் மாரி தாயாம்
பாம்பை போல கடி விஷமாம் தாயே கடி விஷமாம்

வேறுநடை பாட்டு

[பூ] போட்டமுத்து யிரக்குவாளாம் ஆனந்தமே
தாயே ஆனந்தமே
போக்கிரியை கருவருப்பாள் ஆனந்தமே
தாயே ஆனந்தமே
துஷ்டரை கருவருப்பாள் ஆனந்தமே
தாயே ஆனந்தமே
துர்க்கையுள்ள மாரிமுத்தாம் ஆனந்தமே
தாயே ஆனந்தமே

ஷை பாட்டு

[பூ] நல்லவர்க்கு நல்லவளாம் தாயே நல்லவளாம்
நாகத்தின் கண்ணுடையாள் தாயே கண்ணுடையாள்
[ப] ஆமாம், ஆமாம் [பாட்டு முடிவு]

மனப்பாக்கம் கன்னியம்மாள் பேரில் பாட்டு

ஊர்பேர் மனப்பாக்கம்—தாயே
உத்தமிபேர் கன்னியம்மாள்
நாடுபேர் மனப்பாக்கம்—தாயே
நாயகிபேர் கன்னியம்மாள்
ஆராறு கூடியமமா—தாயே
அணேயுதம்மா பாலாறு
ஏழாறும் கூடியம்மா—தாயே
இணேயுதம்மா பாலாறு

பாலாற்றங் கரைதனிலே—தாயே
பத்தினியாள் கோவில் கொண்டாள்
அக்காளும் தங்கையரும்—தாயே
ஐந்துரெண்டு ஏழுபேராம்
ஒக்கவுறவாடி நீங்கள்—தாயே
வுத்தமிமார் வாங்களம்மா
[ப] ஒக்கவுறவாடி

இல்லிடத்து கன்னிமார்மன்பேரில் பாட்டு

[பூ] ஆடை கட்ட தாயே அறியாத
அரன்பாதம் தாயே சேர்ந்த கன்னி
சித்தாடை தாயே கட்டறியாள்
சிவன்பாதம் தாயே சேர்ந்தகன்னி
அரைநாழி தாயே கொள்ளையிலே
அரன்பதியை தாயே சேர்ந்தகன்னி
வளர்த்தநல்ல தாயே அருமையென்ன
வரிசைதந்த தாயே நேர்த்தியென்ன
வளர்த்ததாய் தாயே தேடுதம்மா
வாங்களம்மா தாயே பூமுடிக்கி

மாயிமருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] பூபோட்டு நீர்தெளிக்க ஆனந்தமே
பூமுடிக்கி வாங்களம்மா ஆனந்தமே
தூங்கும் சமாதி விட்டு ஆனந்தமே
துள்ளி எழுந்திரம்மாள் ஆனந்தமே
வாழ்ந்த மனைதேடி ஆனநதமே
வாங்களம்மா கன்னியம்மா ஆனந்தமே

விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை:—
கண்டு வெகு நாளாச்சி என் தாயே தாயே
கை விளக்கில் வந்தமரும்

பார்த்துவெகுநாளாச்சு என் தாயேகன்னியம்மா
பதிவிளக்கில் வந்தமரும்
ஆரார் வரும்வேளை என் தாயே தாயே
ஆயியுட காவலிலே

பூவாடையை அழைப்பு இரட்டைசீர்

[பூ] செத்தநாள் பூவாடை கண்டாரம்மா
சென்றொருநாள் தாயே காணவில்லை
மாண்டநாள் பூவாடை கண்டாரம்மா
மற்றொருநாள் தாயே காணவில்லை
ஆடைநல்லதாயே கொடியிலம்மா
ஆபரணம் பூவாடை பெட்டியிலே
சேலைநல்ல தாயே கொடியிலம்மா
சிறுவானம் பூவாடை பெட்டியிலே
அரைத்தமஞ்சள் தாயே வேர்வைதட்ட
அருங்கிளியே பூவாடை வாங்களம்மா
உரைத்தமஞ்சள் தாயே வேர்வைதட்ட
உத்தமியே பூவாடை வாங்களம்மா

முனிநாதர் பேரில் பாட்டு இரட்டைசீர்

[பூ] அய்யர் வாரூர் சுவாமி அய்யர் வாரூர்
அய்யர் முனிசுவாமி நாதர் வாரூர்
சட்டை நல்ல சுவாமி நாதர் வாரூர்
சந்நியாசி சுவாமி பேய் முனியா
சடையா நல்லசுவாமி சடைபாரம்
சங்கிலியோ சுவாமி தோள் பாரம்
சங்கிலியை சுவாமி தோளிலிட்டு
சைவ முனிசுவாமி வாங்களய்யா

முடி அழைப்பு

மாயிமருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] காலாழி சப்தம் கேட்டு ஆனந்தமே
கன்னி முடி வந்தவரே ஆனந்தமே
பீலாழி சப்தம் கேட்டு ஆனந்தமே
பின் தொடர்ந்து வந்தவரே ஆனந்தமே
தங்குமிட மறியேன் ஆனந்தமே
தனித்திருக்கும் தாவறியேன் ஆனந்தமே
குந்து மிடமறியேன் ஆனந்தமே
குளக்கரையும் நானறியேன் ஆனந்தமே
எந்தவிடமறியேன் ஆனந்தமே
எதிராடி வாருமைய்யா ஆனந்தமே
ஆவல் கொண்ட மங்கை முடி ஆனந்தமே
ஆடி நல்ல வாருமைய்யா ஆனந்தமே

விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை :
வந்தமரும் முனிசாமி என் ஐயா ஐயா
வடிவிளக்கின் மீதில் ஐயா
ஆரார் வரும் வேளை என் சுவாமி சுவாமி
ஆயியுட காவலிலே

காட்டேரி வர்ணிப்பு

[பூ] பஞ்சபிருளன் தாயே தேவியபமா
பதியமர்ந்த தாயே காட்டேரி
முத்திருளன் தாயே தேவியம்மா
மோகனப் பெண் தாயே காட்டேரி
மாடயிருளன் தாயே தேவியம்மா
மாதங்கி தாயே காட்டேரி
கோழி முட்டை தாயே கண்ணழகும்
கோடாலி தாயே பல்லழகும்

குட்டி நல்ல தாயே சுவற்றடியில்
குந்திருக்கும் தாயே காட்டேரி
பாழடைந்ததாயே சுவற்றடியில்
பதுங்கிருக்கும் தாயே காட்டேரி

முடி அழைப்பு

மாயிமருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] ஆசைமுடி தேடுதம்மா ஆனந்தமே
ஆடிவாரும் காட்டேரி ஆனந்தமே
முட்டைவொன்னும் பெட்டைவொன்னும் ஆனந்தமே
மூழ்கிவரும் சேவலொன்னும் ஆனந்தமே
கருப்பு புடவை வொன்னும் ஆனந்தமே
கண்டாங்கி ரவிக்கை வொன்னும் ஆனந்தமே
சிகப்பு புடவை வொன்னும் ஆனந்தமே
சிந்தாமணி ரவிக்கை வொன்னும் ஆனந்தமே
மூன்றும் மாதம் தன்கருவை ஆனந்தமே
முட்டையென்று தின்பவளாம் ஆனந்தமே
நான்காம் மாதம் தன் கருவை ஆனந்தமே
நலமாக உண்பவளாம் ஆனந்தமே

விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை :—

அமரம்மாள் காட்டேரி—என் தாயே தாயே
அமங்கையாள் முன்பாக
ஆரார் வரும்வேளை—என் தாயே தாயே
ஆயியுட காவலிலே.

பூசாரி பாட்டுகள் முற்றிற்று.

———

வாசீஸ்வரி அச்சகம் சென்னை-1. (1966)

# பழைய கொக்கோகம்

[அழகிய நிர்வான ஆப்டோன் படங்களுடன் கூடியது]

## விலை ரூபாய் 4-00.

அதிவீரராம பாண்டியனால் இயற்றப்பட்ட பழைய கொக்கோகத்தின் உண்மையான அச்சுப் பிரதி இதுவே, இரதி மன்மதன் சிங்கார இரகசியங்களும், சம்சாரசுக போகங்களும் குடும்ப இரகசியங்களும், மணவாழ்க்கையின் மர்மங்களும், காதலன் காதலி சரசசல்லாப இன்பங்களும், காலதேசவர்த்தமானங்களுக்கேற்ப இன்றைய மேதாவிகளான காம கலா சாஸ்திரக்ஞர்களின் அபிப்பிராயங்களும்கலந்து பழமையோடு புதுமையும் கூடி பொன் மலர் வாசனை கொண்டதுபோல் உங்களைக் குதூகலிக்கச் செய்யும் பல அழகிய இயற்கை உருவமைந்த ஆப்டோன் படங்களுடனும் கூடியது.

அழகிய பைண்டு; சிறந்த அச்சு; நல்ல வசனம் எல்லாம் கூடி ஒருங்கு அமைந்த பழைய கொக்கோகம் இதுவே,

எமது விலாசம்:—

ஆர். ஜி. பதி கம்பெனி,
4, வெங்கட்ராமய்யர் தெரு,
சென்னை-1.

# சரீர மர்மம்

ஓர் மானிட மர்ம இன்ப நூல்

**விலை ரூ 3-00.**

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும், அவர்களது மர்ம ஸ்தானங்களின் அமைப்பும், அவைகளின் நேர்மையான உபயோகங்களும், ரதி மன்மத சிங்கார ரகஸ்யங்களும், சம்சார சுகம், குடும்ப ரகசியம், மணவாழ்க்கையின் மர்மங்கள், காதலர் காதலி, சரச சல்லாப இன்பங்கள், ஆரோக்கிய சாஸ்திரம், மருத்துவ சாஸ்திரம், சிசு சம்ரக்ஷண சாஸ்திரம் முதலியவும் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைப் போக்கத்தக்க சிகிச்சைகளும், மகாரிஷிகள் மர்மமாக ஆதியில் எழுதிய இல்லறஇன்பங்களும், விவாகமானவர்களுக்கும் இனிமேல் விவாகம் செய்துக்கொள்ளும் சிறுவர் சிறுமியர்களுக்கும் இன்றியமையாத நூல், இந் நூலின் சுவையானது படிப்போரை பிரமிக்கச் செய்து முற்றிலும் படிக்காமல் கீழே வைக்க மனந் துணியாது. இதன் ஒவ்வோர் அத்தியாயமும் குடும்ப வாழ்க்கையின் குண நலனை புகட்டும்.

எமது விலாசம்:—


ஆர். ஜி. பதி கம்பெனி,
4, வெங்கட்ராமய்யர் தெரு,
சென்னை-1.

# திரிகால இரேகை சாஸ்திரம்

**விலை ரூபாய் 1-50.**

**[ சக்திதாஸன் எழுதியது. ]**

விளக்கமான அநேகப் படங்கள் அடங்கிய இச்செந்தமிழ் வசன நூலறிவினால் ஆயுள், விவாக லாபம், குணம், பக்தி, அதிர்ஷ்டம், சந்தானம், அறிவு, சிற்றின்பம், வியாஜ்ஜியம், சக்தி, ஐசுவரியம், கண்டம், ஜயம், வியாதி, அபாயம், வஞ்சகம், பேரின்பம், காரியசித்தி, சௌக்கியம், இல்லற சுகம், மரணம் முதலிய விஷயங்களைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். அன்றியும் இது விதியின் பலனையும், வாழ்க்கையின் இரகசியங்களையும் வெளிப்படுத்துகிற திறவுகோலாக இருக்கிறது. உங்கள் கையிலுள்ள பலன்களைச் சுலபமாய் நீங்களே தெரிந்துக்கொள்ளலாம்.

தமிழ்ப் புத்தகங்கள் அடங்கிய விலை விபர ஜாபிதா தேவையுள்ளவர்கள் தங்கள் விலாசத்தை தெரிவித்தால் இலவசமாக அனுப்பப்படும்.

எமது விலாசம்:

**ஆர். ஜி. பதி கம்பெனி,**
4, வெங்கட்ராமய்யர் தெரு,
சென்னை - 1.